525

தொகுதி 11.] 1932ஸு மார்ச்சுமீ [பகுதி 2.

மனமோகினி

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
கா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

MAY 1932

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களையும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்

ஏழாவது பாகம்

186566
4 MAY 1932
MADRAS

முதல் அத்தியாயம்

வயோதிகரின் இரண்டாவது விவாகம்

நருமதா நதிக்கரையில் கிருஷ்ணகிரி நகரின் எல்லையில் சுந்தரவிலாச மாளிகை என்னும் திவ்யமான பங்களா ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கட்டடம் மிக்க விசாலமானதாயும், பார்வைக்கு ரம்மிய மானதாயும், நாற்புறமும் அழகான தோட்டங்களும், உயரமான மதில்களுமுடையதாயும் இருக்கின்றது. அக்கட்டடத்தைப் பார்க்கும்போதே அது பற்பல காலத்திய நாகரிகங்களும் ஒருங்குசேர்ந்து ஒரு உருவாகத் தோன்றுவதுபோல் பலகாலத்திய சிற்ப வேலைப்பாடுகளும் அதில் மிளிர்வதைக் காணலாம். அக்கட்டடம் ஏதோ ஒரு பெரிய கோட்டையைப்போல் காணப்படுமென்றாலும் அது எக்காலத்திலும் சண்டைக்காக உபயோகப்படுத்தப்பட்டதல்ல. அதன் மேற்குப்புறச் சுவர் நதிக்கரையில் இருப்பதால் அடிக்கடி அந்த ஆற்றில் உண்டான வெள்ளத்தின் பயனாக அச்சுவர் சிறிது பழுதுபட்டிருந்தது. அந்தக் கட்டடத்துக்குச் சமீபத்தில் விஸ்தாரமான வயல்களும், புஞ்செய் நிலங்களும் சிறுசிறு வீடுகளும் பரவிக்கிடந்தன. அது

முழுதும் கிருஷ்ணகிரி ஜமீன்தாரரும் சுந்தரவிலாச மாளிகையின் சொந்தக்காரருமான சுந்தரம் பிரபுவுக்குச் சொந்தமானது. அக்கட்டடத்தின் முன்பாகத்தில் அதிலுள்ளவர்கள் வசித்துவந்தார்கள். அதில் இன்பகரமான வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா சாமான்களும் வசதிகளும் வைக்கப்பட்டிருந்தன. அதன் கதவுகளும், வாயிற்படிகளும். ஜன்னல்களும் சித்திர வேலைப்பாடுகள் அமைந்தவையாக இருந்தன. கட்டடத்தில் நுழைந்ததும் பெரிய சலவைக் கற்களாலான தூண்களையுடைய ஹால் ஒன்று இருந்தது. அந்த ஹாலின் ஒருபுறத்திலிருந்து மாடிக்குப்போக படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. அக்கட்டடத்தின் பின்பாகம் நீண்டகாலமாகவே உபயோகத்தில் இல்லாமல் இருந்தது. அப் பாகத்தின் கட்டடமும் மிகப் பழையதுபோலவே காணப்பட்டது. அங்கிருந்த சாமான்களும் பழைய காலத்தியதாகவே இருந்தன. ஆனால் அபூர்வமாக விளக்கேற்றப்பட்டு அந்த சாமான்கள் பூராவாக அழிந்துவிடாதபடி பார்த்துக்கொள்வதுமுண்டு.

அக்கட்டடத்தின் அருகில் மேற்குப் பக்கத்தின் சுவர் எல்லைக்குள்ளேயே சிறுமடம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அம்மடத்தின் ஒரு பக்கத்தில் பூமிக்குள் ஒரு அறை இருந்தது. அதற்குள் இறங்க இருட்டான படிக்கட்டுகள் இருந்தன. நம்முடைய இக்கதை 1825-ஆம் வருஷத்தில் ஆரம்பமாகிறது. அக்காலத்தில் அம்மாளிகையின் சொந்தக்காரரான சுந்தரம் பிரபு மிக வயோதிகராயிருந்தும் அப்போதுதான் இரண்டாவது விவாகம் செய்துகொண்டிருந்தார். அந்த இளம்பெண்ணை இரண்டாவது மனைவியின் மூலமாக மூன்று குழந்தைகளைப் பெற்றிருந்தார். அவர் ஏன் இந்த தள்ளாத வயதில் விவாகம் செய்துகொண்டார் என்னும் விவ

ரத்தையும் வாசகர்களுக்குச் சொல்லவேண்டியது அவசிய மாக இருக்கிறது. சுந்தரம் பிரபு நீண்டகாலமாகவே மனைவி மக்கள் இல்லாதவராக இருந்தார். ஆதலின் அவருடைய ஆஸ்திபாஸ்திகளுக்கு அவரது தம்பியின் குமாரனான இராஜ சேகரனே வாரிசுதாரனாக இருந்தான். இராஜசேகரன் பிறந்த சொற்பகாலத்துக்குள் அவனது தாய் தந்தையர்கள் ஒருவர் பின் ஒருவராக இறந்துவிட்டார்கள். ஆகவே அவன் திக் கற்றவனாய்த் தன் பெரியப்பாவாகிய சுந்தரம் பிரபுவின் வீட் டில் அவர் ஆதரவிலேயே வளர்ந்துவந்தான். அவருக்கும் சொந்த குழந்தைகள் ஒன்றும் இல்லாமல் இருந்தபடியால் அவனையே தன் மகனைப்போல் பாவித்து மிக்க அன்புடன் வளர்த்து வந்தார்.

சுந்தரம் பிரபு பெரும்பாலும் அத் தேசத்தின் தலை நகரமும் முன்பே நமது முதல் பாகத்தில் நன்றாக வருணிக் கப்பட்டிருப்பதுமான இரத்தினபுரியிலிருந்த தனது பெரிய பங்களாவிலேயே வசித்துவந்தார். எப்போதாவது வரு ஷத்துக்கு இரண்டு மூன்று முறை அவர் கிருஷ்ணகிரி ஜமீ னுக்குவந்து தனது சுந்தரவிலாச மாளிகையில் தங்கித் தன் வேலைகளைக் கவனிப்பதுண்டு. அவர் தாய் தந்தை யற்ற இராஜசேகரனைச் சிறிதும் கண்டிக்காமல் அவன் இஷ் டப்படி யெல்லாம்விட்டு வளர்த்தபடியால் அவன் தக்க வயதையடைந்து கல்வியை முடித்துக்கொண்டு கல்லூரியை விட்டு வெளியே வந்ததும் இரத்தினபுரிபோன்ற நவீன நாக ரிகம் சிறப்புற்று விளங்கும் பெரியபட்டணத்தில் எவ்வளவு அதிகமான ஒழுக்கமற்றதும் ஆபாசமானதுமான முறையில் வாழ்க்கையை நடத்தலாமோ அப்படிப்பட்டவகையில் காலத்தைக் கழிக்கலானான். முதலில் ராஜசேகரனின் சமா சாரங்களெல்லாம் பிரபுவுக்குத் தெரியாமல் இருந்தது. உண்

மையிலேயே அவர் அதைப்பற்றிக் கவனம் செலுத்தாமல் இருந்தார். ஆனல் சொற்பகாலத்துக்குள் சுந்தரம் பிரபுவின் நண்பர்கள் பலர், தாங்கள் ராஜசேகரனைப்பற்றி அறியும் விஷயங்களையெல்லாம் அவரிடம் தெரிவித்துவந்தார்கள். தினசரி பலர் இவ்வாறு அவனைப்பற்றிய புகார் கூறவே அவரும் அவனுடைய நடத்தையைப்பற்றிக் கவனிக்க ஆரம்பித்தார். இதனல் ராஜசேகரன் செய்யும் அக்கிரமங்களெல்லாம் அவருக்குத் தெரிந்தது. அவன் செய்யாத இழிதொழில் ஒன்றும் கிடையாதென்றே கூறிவிடலாம். கண்ட மாதர்களுடன் கூடிக் குலாவினன். சதாகாலமும் மதுபானமும் மாமிச போஜனமும் செய்வதிலேயே காலங் கழித்தான். அந்நகரில் இருந்த காலிப்பையன்களுடன் கூடிக்கொண்டு எப்படிப்பட்ட அக்கிரமத்தையும் சிறிதும் அஞ்சாது செய்துவந்தான். இதையறிந்த சுந்தரம் பிரபு பீதியடைந்து அவனிடம் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டார். மேலும் அவன் தானே சுந்தரம் பிரபுக்கு வாரிசுதாரனுதலால் கிருஷ்ணகிரி ஜமீன் முழுதும் தனக்கே சேருகிறதென்னும் தைரியத்தின்மீது கண்ட இடத்தில் பெரும் தொகைகளைக் கடன் வாங்கிவிட்டான். அன்றியும் அவன் யாரிடம் பார்த்தாலும், 'கிழவன் விரைவில் இவ்வுலகைவிட்டு ஒழியாவிட்டால் அவனை ஒழித்துவிடுவதற்குவேண்டிய முறைகளை நானே கையாளுவேன்' என்றும் சொல்லிவந்தானும். அவன் அவ்வாறு கூறியது மெய்யோ, பொய்யோ எவ்வாறிருப்பினும் தன் சகோதரன் மைந்தன் நன்றிகெட்ட முறையில் இவ்வாறு பேசுகிருன் என்று தெரிந்தமாத்திரத்தில் சுந்தரம் பிரபுவுக்கு ஆத்திரம் அதிகரித்துவிட்டது. தான் இராஜசேகரனைக் குழந்தைப் பருவம் முதலே அவன் இஷ்டப்படி நடக்க விட்டுவிட்டதனுல்தான் அவன் இவ்வாறு தவருன நெறியில் செல்லக்

காரணமாயிற்று என்பதை சுந்தரம் பிரபு உணர்ந்துகொள்ளாமல் முன்பு அவனிடம் எவ்வளவு அன்புடையவராகவும் தாராளமுடையவராகவும் இருந்தாரோ அவ்வளவும் ஆத்திரமும் வெறுப்பும் அடைந்தார். ஆகவே அவனுக்குச் சரியான படிப்பினை போதிக்க வேண்டுமென்று உறுதிசெய்து கொண்டுவிட்டார்.

சுந்தரம்பிரபு ராஜசேகரனைப்பற்றி விசாரித்த சங்கதி அவனுக்குத் தெரியாதாகையால் அவன் அவருடைய எண்ணத்தைப்பற்றி லட்சியம் செய்யாமலே கூத்தி, குடி, சூது முதலிய பஞ்சமகா பாதகத் தொழிலை நடத்திவந்தான். ஆனாலும் சுந்தரம் பிரபுவினுடைய எண்ணம் அவனுக்குத் தெரிய வேண்டிய காலம் வந்துவிட்டது. அதாவது ஒருநாள் விடியற்காலை அவன் வழக்கம்போல் திருட்டுத்தனமாக இரத்தினபுரி நந்தவனத் தெருவிலுள்ள சுந்தரம் பிரபுவின் மாளிகையின் பின்புற வாயிலின் வழியே உள்ளே நுழைய முயன்ற போது அம் மாளிகையின் காவல்காரன் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு உடனே அம்மாளிகையைவிட்டு வெளியே செல்லும்படி கட்டளையிட்டான். அப்போதும் அவன் மதுபான மருந்திவிட்டு மயக்கத்திலிருந்தான். எனினும் சேவகன் நடந்துகொண்ட முறையிலிருந்து திக்பிரமையடைந்த ராஜசேகரன், உடனே அக்கடிதத்தைப் பிரித்து ரஸ்தாவில் இருந்த சர்க்கார் விளக்கு வெளிச்சத்தில் அதைப் படித்துப் பார்த்தான். அதில் விஷயங்களெல்லாம் சுருக்கமாகவே எழுதப்பட்டிருந்தது. அதாவது ராஜசேகரனுடைய விஷயங்களெல்லாம் தெரிந்துவிட்டதாகவும், அவன் இனி சுந்தரம் பிரபுவின் எதிரிலும் வரக்கூடாதென்றும், வருஷவாரி முந்நூறு பவுன் உபகாரச் சம்பளம் அனுமதிக்கப்படுமென்றும் கூறப்பட்டிருந்தது. அதைப் படித்ததும் சிறிது

நேரம் ஒன்றும் பேசமுடியாமல் திக்பிரமையுடன் நின்றிருந்தான். பிறகு அவன் சமாளித்துக்கொண்டு சுந்தரம் பிரபுவைப்பற்றித் தூஷணையாகப் பேசியதுடன் அச்சேவகனிடம், "அடே! நீ போய் அக் கிழக் கழுதையிடம் நான் அவனைச் சிறிதும் லட்சியம் செய்யப்போவதில்லையென்று சொல், எப்படியிருந்தாலும் அவனுடைய ஆஸ்திபாஸ்திகளெல்லாம் எனக்கே சேரவேண்டும். அவன் செத்தால் தானாக வருகிறது. அதுவரை நான் என் இஷ்டப்படி கடன்வாங்கிக் கொள்கிறேன். அவன் கொடுப்பதாகக் கூறும் வருஷாவரி மூன்நூறு பவுனை அவனே வைத்துக்கொள்ளட்டும்,'' என்று கூறினான்.

இவ்வாறு கூறிவிட்டு அவன் அம்மாளிகையில் நுழையாமலேயே தன்னுடைய அந்தரங்க நண்பர்களுடன் கலந்து கொள்ளவும், அவர்களிடம் இதைப்பற்றித் தெரிவிக்கவும் ஓடி விட்டான். அவனது நண்பர்கள் அவன் நடந்து கொண்ட மாதிரியைக் கண்டு சந்தோஷப்பட்டு அவனைப் பாராட்டினார்கள். அவனும் தலை கால் தெரியாமல் தன் தீய செயல்களில் மிதமிஞ்சி இறங்கிவிட்டான். எவரும் தாங்கள் செய்யும் தவறான காரியம் பிறருக்குத் தெரியக்கூடாதென்னும் எண்ணத்துடன் முதலில் இரகசியமாகவே செய்வர்; அது தானாகவே மற்றவர்களுக்குத் தெரிந்துவிட்டால் பிறகு அவர்கள் சிறிதும் கூச்சமின்றி அத்தவறுதலைப் பகிரங்கமாகச் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். சுந்தரம் பிரபுவின் சேவகனே ராஜசேகரனுடைய செயல்களை உண்மையில் வெறுத்த தாலும், தன் எஜமானுக்கு உண்மையான சேவகனாயிருந்த தாலும், தன்னிடம் ராஜசேகரன் கூறிய எல்லாவற்றையும் அப்படியே ஒரு எழுத்தையும் விடாமல் பிரபுவினிடம் தெரிவித்து விட்டான்.

இதைக்கேட்ட பிரபு இனிதான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதுபற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டவரேபோல், "ஓ! அப்படியானால் இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. உடனே வண்டியைத் தயார் செய்யுங்கள். நான் கிருஷ்ணகிரி ஜமீனுக்குச் செல்லவேண்டும்" என்று கூறினார்.

தனது தம்பியின் குமாரனாகிய இராஜசேகரனுடன் இவ்வாறு சண்டை ஏற்பட்டபோது சுந்தரம் பிரபுவுக்கு வயது சுமார் அறுபதாகியிருந்தும் எப்படியாவது இரண்டாவது கலியாணம் செய்து கொள்வதென்றும், அம்மனைவியின் மூலமாகக் குழந்தையைப் பெற்றுவிட்டால் ராஜசேகரன் வாரிசுதாரனாக இருக்க முடியாமல் திண்டாட வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டார். ஆகவே உடனே இரத்தினபுரியினின்றும் கிருஷ்ணகிரிக்குப் புறப்பட்ட பிரபு வண்டியில் பலவித யோசனைகளைச் செய்துகொண்டே போனார். தான் யாரைக் கலியாணம் செய்து கொள்வது என்பதிலும் அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். ஏனெனின், தான் யாரைக் கோருகிறாரோ அப்பெண்மணியை மணப்பது எளிதான காரியமென்பது அவருக்குத் தெரியும்.

அவர் கலியாணம் செய்துகொள்ள விரும்பிய பெண் மணி பதினேழு வயதுடையவளாய் இருந்தாள். அவள் கிருஷ்ணகிரி ஜமீனில் சுந்தரம் பிரபுவின் ஆதரவில் இருந்த வயது சென்ற மடத்துக் குருவின் குமாரியாவாள். ஹேமவதி என்னும் பெயரினையுடைய அம்மங்கை வயதுக்கேற்ற உயரமானவளாயும், தேகக்கட்டுடையவளாயும், பார்வைக்கு மனோரம்மியமானவளாயும் இருந்தாள். அவளுடைய மார்பும் இதர உருவங்களும் அவள் இன்னும் இரண்டொரு வயது மூத்தவளோ என்று நினைக்கும்படி செய்தன. அத்த

கைய வளர்ச்சியை அடைந்திருந்தாள். அவள் உறுதியான சுபாவமுடையவளாயும், அழகுக்கேற்ப அறிவுடையவளாயும், இனிய குணநிசயங்களுடையவளாயும் இருந்தாள். அவளு டைய ஒவ்வொரு அவயவமும் அவளுடைய குணநிசயத்தை வெளிப்படுத்தின. அவள் குழந்தையாக இருக்கும் போதே பெற்றதாயை இழந்து விட்டபடியாலும், தந்தையாரால் வளர்க்கப்பட்ட படியாலும், அன்புள்ள தாய்மார்களாலோ அல்லது உறவினர்களான மாதர்களாலோ மட்டும் கற்பிக்கக் கூடிய அடக்கம், பொறுமை முதலிய குணங்கள் அவளிடம் சிறிது குறைவாக இருந்தது. ஆடவரால் வளர்க்கப்பட்ட படி யால் அவளுடைய உணர்ச்சிகளையோ, இஷ்டத்தையோ தடுப்பாரில்லாமல் சுயேச்சை புத்தியுடையவளாய் விட்டாள். எனினும் தக்க கல்வியைப்பெற்று நன்றாகச் சம்பாஷிக்கும் திறமையையும் பெற்றிருந்தாள். இவ்வாறாக பதினேழு வய துள்ள பெண்மணியான ஹேமவதி அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த மாதாகவே விளங்கினாள்.

சுந்தரம் பிரபுவுக்கு ஹேமவதியின் தந்தையாரான கோவிந்தானந்தர் சுமார் இருபத்தைந்து வருஷங்களாகவே தெரியுமாதலால் ஹேமவதியும் பிறந்தது முதலே அவருக்கு நன்கு தெரியும். ஆகவே அவளுடைய குணாலன்களும் சாமர்த்தியமும் அவருக்குச் செவ்வனே தெரியுமாதலின் அவளை அப்போது முதலே தன் சொந்த குமாரிபோல் பாவித்து அன்புடன் நடந்து வந்தார். ஆனால் இப்போது அவளையே தனது இரண்டாவது மனைவியாகக் கொள்ள விரும்பினார். அவள் நல்லவளென்பதும் பரிசுத்தமான இரு தயமுடையவ ளென்பதும் ஆனால் சிறிது பேராசை உடை யவளென்பதும் அவருக்குத் தெரியும். எனினும் அவள் தன்னைக் கலியாணம் செய்துகொண்டு விட்டால் தன்னைத்

துரோகம் செய்துவிட்டு வேறு யாரிடமும் காதல் கொள்ளக் கூடிய நன்றிகெட்ட குணம் அவளிடம் இராது என்று நிச்சயித்தார். மேலும் அவள் மூலமாக அவருக்குக் குழந்தைகள் பிறந்து ஆஸ்திக்கு வாரிசுதார் ஏற்பட்டு விட்டால் அக் குழந்தைக்கு ராஜசேகரனிட மிருந்து எத்தகைய தொந்தரையும் நேராதபடி பார்த்துக் கொள்ளக்கூடிய ஆற்றலும் அவளுக்குண்டு என்றும் நம்பினர்.

சுந்தரம் பிரபு வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போதே இவ்வாறெல்லாம் தனக்குள் சிந்தித்துக் கொண்டு விட்டார். அன்று மாலையே அவர் சௌக்கியமாக சுந்தரவிலாச மாளிகைக்கு வந்து சேர்ந்தார். மறுநாட் காலையே அவர் கோவிந்தானந்தர் மடத்திற்கு ஆளை அனுப்பி அவரும் அவருடைய குமாரியும் ஒருவாரம் வரை சுந்திர விலாச மாளிகையில் தன்னுடைய விருந்தினராகத் தங்க வேண்டுமெனச் சொல்லி யனுப்பினர். இவ்வாறு அழைத்த தற்கு என்ன காரணம் என்பதையும் அவர்கள் யோசியாமல் அவரது விருப்பப்படியே அங்கு வந்தார்கள். அவர்கள் வந்த முதல் நாளே பகல் போஜனத்துக்குப் பின், ஹேமவதி வேறு ஒரு அறைக்குச் சென்றபோது சுந்தரம் பிரபு குருவினிடம் தன் உத்தேசங்களை யெல்லாம் வெளியிட்டார். முதலில் கோவிந்தானந்தர் தன் செவிகளையே நம்ப முடியாமல் தான் காண்பது கனவோ என்றும் நினைத்தார். பிறகு ஒருகால் பிரபு வேடிக்கை செய்கிறாரோ என்று கருதினர். அதன் பின்னர் பிரபு பைத்தியக்காரனாகத்தான் இருக்கவேண்டுமென்று நிச்சயித்தார். ஆனல் சுந்தரம் பிரபு தான் கூறுவது தமாஷ் அல்லவென்றும், தனக்குப் பைத்தியம் ஏதும் பிடிக்கவில்லை யென்றும், தன் உள்ளத்திலுள்ள உண்மையான அபிப்பிராயத்தையே தெரிவிப்பதாகவும் கூறியபின் குருவும் உண்மை

என்ன என்பதைத் தெரிந்து கொண்டார். ஹேமவதியும் இந்த யோசனையை ஒப்புக்கொள்வாள் என்னும் நம்பிக்கையின் மீது அவர் அதற்கு உடன் பட்டார். அன்று பூராவும் அவளிடம் இது விஷயமாய் ஒன்றும் அறிவிக்கப்படவில்லை. மறுநாள் காலை அவளுடைய தந்தை இதைப்பற்றி அவளுக்குத் தெரிவித்தார். அவள் தன் வாயால் என்ன சொல்லப் போகிறாள் என்று தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லாமலே போய் விட்டது. ஏனெனின், இச்செய்தியைக் கேட்ட மாத்திரத்தில்தான் கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாய்ப் போய் விடும் ஆசையினால் அவள் உள்ளம் பூரிக்கவே அந்த உணர்ச்சி அவள் முகத்தில் வெளிப்பட்டது. அவளுடைய ஸ்தனங்கள் பூரித்தன. கண்களில் ஆனந்தப் பிரகாசம் வீசிற்று.

இவ்வாறு இவர்கள் பேசிமுடித்த பதினைந்து தினங்களுக்குள் கோவிந்தானந்தாது மடத்திலேயே சுந்தரம் பிரபுவுக்கும் ஹேமவதிக்கும் விவாகம் நடந்தேறியது. மிக்க விசாலமானதும், அவள் விருந்தினள் என்னும் முறையில் அடிக்கடி போய்த் தங்கியதுமான சுந்தரவிலாச மாளிகைக்கும், கிருஷ்ணகிரி ஜமீனுக்கும் தான் எஜமானியாகிவிட்டதையறிந்து அவள் புளகாங்கித மடைந்தாள். வயது சென்ற கிழவனை மணந்து கொண்டும் அவள் அவ்வளவு ஆனந்த மடைந்ததற்குக் காரணம் அவளுடைய பேராசைக்குணமே யாகும். அப்பேராசை என்னும் பெருநோயானது அவளுடைய காதலையும் கட்டுப்படுத்தி விட்டது. அவ்வாறு விவாகம் நடந்த விஷயம் பத்திரிகைகளின் மூலம் இரத்தினபுரியிலிருந்த ராஜசேகரனுக்குத் தெரிந்ததென்றாலும், அவன் அதைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. ஏனெனின் கிழவனும் குமரியும் கலியாணம் செய்து கொண்டிருப்பதால் நியாயமான தம்

பதிகளல்லாத அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்காது என்று அவன் நம்பினன். ஆகவே அவன் அப்போதேனும் தன் பெரிய தந்தையுடன் சமாதானம் செய்துகொண்டு விடலா மென்று நினையாமல் பழையபடியே கணக்கு வழக்கில்லாமல் கடன் வாங்குவதிலும் அதைக் கள்ளுக்கும் கூத்திக்கும் சூதுக்கும் செலவிடுவதிலுமே காலங்கழித்து வந்தான். ஆனல் கலியாணமான செய்தி தெரிந்த பன்னிரண்டு மாதங் களுக்குப் பின்னர் ஹேமவதி ஒரு பெண் குழந்தையைப் பெற்ருள் என்பதை யறிந்து ராஜசேகரன் பீதியையும் கவலை யையும் அடைந்தான். எனினும் தன் பெரிய தந்தைக்குப் பிள்ளை பிறக்காமல் பெண் பிறந்ததால் பட்டமும் ஆஸ்தியும் தனக்கே கிடைக்கும் என்று நினைத்து இன்னும் அதிகமாகத் தன் இழி செயல்களில் இறங்கினன். ஆனல் எப்போதும் யார் பணம் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்? கடன் கொடுப்பாரில்லாமல் அவனிடம் வேண்டிய அளவு பண மில் லாமற்போகவே அவனைச் சுற்றிக்கொண்டிருந்த பணக்காரர் களும் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமான நண்பர்கள் ஒவ்வொருவராக அவனை விட்டுப் பிரிந்து விட்டார்கள். இவ் வாறு இரண்டு வருஷங்கள் கழிந்த பின்னர் சுந்தரம் பிரபு வின் இரண்டாவது மனைவி இரண்டாவதுமுறை பிரசவித்தா ளென்றும், அதுவும் பெண்குழந்தைதா னென்றும் பத்திரி கையில் வெளியானதைப் படித்தான். இதனல் ராஜசேகரன் சிறிது மனக்கவலை யடைந்தா னென்ருலும் அதுவும் பெண் குழந்தை தானே என்னும் எண்ணத்துடன் அலட்சிய மாகவே இருந்து நல்வழிக்குத் திரும்பாமல் போய் விட் டான்.

ஆனல் நாள் செல்லச் செல்ல அவனல் கடன் வாங்க முடியாமற் போய்விட்டது. ஆகவே அவனுக்கு எப்பக்கம்

திரும்பினும் தயாமே அதிகம் காணப்பட்டது. அவனு டைய நண்பர்களெல்லாம் அவனைவிட்டுப் பிரிந்துவிட்டபடி யாலும், நண்பர்களின் துணையில்லாமல் ஒரு நிமிஷமும்வாழ அவனால் முடியாமற் போனதாலும் அவன் மிகவும் கேவல மான ஆண் பெண்களுடன் சகவாசம் செய்யவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டுவிட்டது. இவ்வாறு அவன் சமூகத்தில் மிகவும் கேவலமானவனாகக் கருதப்பட்டதுடன் பணமும் அவனுக்கு அவசியம் தேவையாயிற்று. ஆகவே அவன் தன் பெரிய தந்தைக்குக் கடிதம் எழுதித் தனக்கு ஏதேனும் உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டான். சுந்தரம் பிரபுவும் இரண்டாவது கலியாணம் செய்துகொண்டதுமுதல் கிருஷ்ண கிரி ஜமீனிலுள்ள சுந்தரவிலாச மாளிகையிலேயே வசித்து வந்தாரென்றாலும் ராஜசேகரனைப்பற்றி ஒன்றுமே அறியாமற் போகவில்லை. அவருடைய வக்கீல்களும் சிநேகிதர்களும் அப்போதைக் கப்போது ராஜசேகரனுடைய நிலவரம்பற்றிப் பிரபுவுக்கு அறிவித்து வந்தார்கள். ஆகவே சுந்தரம் பிரவுக் குத் தன் தம்பியின் புத்திரனிடம் வெறுப்பு அதிகப்பட்டதே யொழிய சிறிதும் அனுதாபமுண்டாகவில்லை ஆதலின் அவர் ராஜசேகரனுடைய கடிதம் கிடைத்ததும் அதைப் பிரித்துப் பாராமலும் அப்படியே திருப்பி யனுப்பிவிட்டார். இதனால் ஆத்திரமும் மனவேதனையும் அதிகமடைந்த ராஜசேகரன் என்ன செய்வதென்று தோன்றாமல் உறுதியுடன் தன் பெரிய தந்தையாரை எப்படியேனும் கொடியமுறையில் பழி வாங்க வேண்டுமென்று நிச்சயித்தான். ஆயினும் அவனுக் குத் தினசரி செலவுக்குப் பணம் அவசியமாகவும் தேவைபட் டதால் சென்ற சில வருஷங்களாகவே தனக்கென வருஷ வாரி முந்நூறு பவுன் வீதம் தன் பெரிய தந்தை அனுமதித்த தொகை அப்படியே அவன் பெயரால் பாங்கியில் கிடந்தபடி

யால் மூன்று வருஷத்துக்கான தொகையாகிய தொளாயிரம் பவுனையும் அவன் பெற்றுக்கொண்டான். கையில் பணம் கிடைத்துவிடவே தன் பெரிய தந்தையைப் பழிவாங்க வேண்டுமென்று எண்ணியதை மறந்து மீண்டும் பழைய படியே இன்பம் காணவும் ஆரம்பித்தான். ஆனால் திடீ ரென்று சுந்தரம் பிரபுவின் மனைவியாகிய ஹேமவதி மூன் றாந் தடவையாகப் பிரசவித்தாளென்றும், ஆண் குழந்தை பிறந்ததென்றும் கேட்டுத் திக்பிரமை யடைந்தான். இனி அவன் பிரபுவின் சொத்துக்களையோ பட்டத்தையோ பெற முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே அவன் தான் விரும்பியபடி ஆஸ்தியையோ கௌரவத்தையோ அடைய முடியாதபடி தடுப்பது இப்போது பிறந்த ஆண் குழந்தையே என்று அவன் தெரிந்துகொண்டான்.

சுந்தரம் பிரபு ஏன் தன்னுடைய அறுபதாவது வயதில் இரண்டாவது கலியாணம் செய்துகொண்டார் என்பது இப் போது வாசகர்களுக்கு விளக்கியாய்விட்டது. அவர் ஹேம வதியை விவாகம் செய்து நான்கு வருஷங்க ளாய்விட்டபடி யால் அந்த ஆண் குழந்தை பிறக்கும்போது அவருக்கு வயது அறுபத்து நான்கு. இந்த நான்கு வருஷங்களுக்குள் ஹேம வதியும், குழந்தைப் பருவம் முதலே உயரிய பிரபுக்கள் குடும் பத்தில் பிறந்து வளர்ந்தவளேபோல் நாகரிகத்துடன் கூடிய சிறந்த மாதரசியாக விளங்கினாள். பிரபுக்கள் குலத்தைச் சேராத அப்பெண்மணியை மணந்துகொண்டதற்காக சுந்த ரம் பிரபு சிறிதேனும் கவலைப்படவேண்டிய சந்தர்ப்பமே ஏற் படாதபடி அவ்வளவு ஒழுங்காகவும் சாமர்த்தியமாகவும் அவள் குடும்ப விவகாரங்களைக் கவனித்துவந்தாள். மேலும் தான் எதிர்பார்த்தபடி அவள்மூலம் வாரிசுகளாகிய மக்களை யும் அடைந்து குடும்ப இன்பத்தையும் அனுபவிக்கும்

பாக்கியம் கிடைத்தது. அன்றியும் ஹேமவதி, தன்னுடைய உயர்ந்த அந்தஸ்துக்குக் காரணமாயிருந்த பிரபுவை மனமார நேசித்தாள். தன் பாட்டனைப்போன்ற வயதையுடைய பிரபுவினிடம் அவளுக்கு உண்மையான காதல் இயற்கையாகவே ஏற்படவில்லை யென்றாலும் மிக்க பயபக்தி விசுவாசத்துடன் நடந்துகொண்டு அவர் எள் என்று சொல்வதற்குள் எண்ணெய் என்று தெரிந்துகொண்டு சௌகரியங்களைச் செய்து வந்தாள். அவளுக்குக் காம விகாரம் அதிகமாகவே இருந்ததென்றாலும் அவள் எதையும் ஒரு எல்லைக்குள் அடக்கிக்கொள்ளும் திறமை வாய்ந்தவளாதலால் தன்னுடைய பேராசைக் கேற்பத் தனக்குக் கௌரவத்தையும், திரண்ட செல்வத்தையும் அளித்த சுந்தரம் பிரபுவினிடம் அவளுக்குத் தணியா அன்பு இருந்தது. மேலும் பிரபுவின் சொத்து சுதந்தரங்களை அனுபவிக்க உரிமையுடைய ஒருவனுக்குத் தான் தாயாக இருப்பதால் இப்போது அனுபவித்து வரலாமென்னும் நிச்சயம் ஏற்படவே அவளது சந்தோஷம் இன்னும் அதிகமாயிற்று. அப்போது அவளுக்கு வயது இருபத்தொன்று. ஆதலின் அவள் முன்னையவிட அதிக ரூபவதியாகவும், கண்ணைக்கவரும் மேனியை யுடையவளாகவும் ஆனாள்.

அவள் சுந்தரம் பிரபுவை விவாகம் செய்துகொண்டதன் பயனாக மூன்று குழந்தைகளைப் பெற்றாள் என்பது நேயர்களுக்குத் தெரியும். முதலிரண்டு பெண் குழந்தைகளுக்கும் ராஜேஸ்வரி, கற்பகம் என்றும், மூன்றாவதாக பையனுக்குத் தினகரன் என்றும் பெயரிட்டார்கள். அப் பையனுக்கு வலது தோளின்மீது சூரிய உருவம்போன்ற மச்சம் ஒன்றிருந்தது. அதைக்கண்டு தாதிமார்களும், அக்கம்பக்கத்திலுள்ளவர்களும், தினகரன் பிறப்பதற்குமுன் ஹேமவதி

சூரியனைப்போன்ற பிரகாசமுடையவனும், சூரியன் இருட்டைப்போக்கி வெளிச்சத்தைத் தருவதுபோல் தன் வம்சத்துக்கே துயரம் தீர்க்கும் சக்தியுடையவனுமான குழந்தை பிறக்கவேண்டுமென ஆசித்திருப்பாள் என்று பேசிக்கொண்டார்கள். ஆதலின் அக்குழந்தைக்குத் தினகரன் எனப் பெயர் இடப்பட்டது. நம்முடைய கதை ஆரம்பமாகும் 1825-ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி ஜமீன்தார் சுந்தரம் பிரபுவின் குடும்பம் இப்போது விவரித்த நிலைமையில் இருக்கின்றது.

2-வது அத்தியாயம்

மகா கொடிய சூழ்ச்சி

சுந்தரம் பிரபுவுக்குத் தன் இரண்டாவது மனைவியின்மூலம் ஒரு ஆண் குழந்தை பிறந்துவிட்டதென்னும் செய்தியைக்கேட்ட ராஜசேகரன், தான் மூழ்கிக் கிடந்த அயோக்கிய செயலினின்றும் விடுதலையடைந்தான். இனியும் அவ்வாறு செய்துகொண்டிருந்தால் தன் நிலைமை அதோகதியாய்ப் போய்விடும் என்பதை உணர்ந்துகொண்டான். ஆகவே அவனுடைய குணத்திலும் நடத்தையிலும் புதிய மாறுதல் ஏற்பட்டது. அவன் தன் நிலைமையைப் பற்றி நிதானமாக ஆராய்ந்து ஏதேனும் திடமான காரியத்தைச் செய்வதென யோசித்தான். அவன் இரத்தினபுரியிலுள்ள மிகக் கேவலமான ஜனங்களுடனும் பழகி இருந்தபடியால் இப்போது தான் யோசிக்கும் வேலைக்கு யார் தகுதியானவர் என்பதைத் தெரிந்துகொள்ள அவனுக்குச் சௌகரியமாக இருந்தது. சுந்தரம் பிரபுவின் அருமைக் குமாரனாகிய தினகரனைத் தூக்கிக்கொண்டு போய்விட

வேண்டுமென்பது அவனுடைய யோசனை யாதலால் அவன் முன்னதாக ஒரு ஆளை கிருஷ்ணகிரி ஜமீனுக்கு அனுப்பி அந்தக் குழந்தை எப்படி வளர்க்கப்படுகிறது? எப்போது யார் அதை வெளியே உலாவ அழைத்துச் செல்கின்றனர்? என்பனபோன்ற பல விஷயங்களையும் ஆராய்ந்து வரும்படி முதலில் ஒரு ஆளை அனுப்பினான். அந்த ஆள் மகா தந்திரசாலி. இப்படிப்பட்ட அயோக்கியத்தனமான வேலைகள் செய்வதென்றால் அவனுக்கு அதிக சந்தோஷம். உண்மையுடனும் சாமர்த்தியமாகவும் காரியத்தை முடித்துவிட்டே வேறு வேலை பார்க்கும் சுபாவமுடையவன்.

ராஜசேகரன் ஒழுக்கங் கெட்டவனாயும் அயோக்கியனாயும் இருந்தபோதிலும், அவனுக்குத் தன் பெரிய தந்தையாகிய சுந்தரம் பிரபுவைப் பழி வாங்கவேண்டுமென்று அதிக ஆர்வம் இருந்ததென்றாலும், தன் மனோராஜ்யம் நிறைவேறாமற்படி தடுக்கக்கூடியது தினகரனே என்று தெரிந்துகொண்டு அக்குழந்தையினிடம் அதிக துவேஷங் காட்டினானென்றாலும் தன் கையாலேயே அக்குழந்தையைக்கொல்ல அவனுடைய மனம் துணியவில்லை. மேலும் அவன் அரசாங்க சட்டத்துக்கும் அஞ்சினான். அவன்மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு விடுமாயின் அவன் என் செய்வான் பாவம்! ஆகவே ஒரு ஆளைக்கொண்டு அவன்மூலமாகவே தன் எண்ணத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்தான். அன்றியும் கிருஷ்ணகிரியில், தினகரன் சம்பந்தமான சூழ்ச்சி நடைபெறுகையில்தான் இரத்தினபுரியிலேயே இருந்ததாக ருஜுப்படுத்த வேண்டுமென்பதற்காக அவன் அப்போது இரத்தினபுரியிலுள்ள தனக்குத் தெரிந்தவர்கள் வீடுகளுக்கெல்லாம் சென்று பலருடனும் பேசிக்கொண்டிருந்தான். பல பெரிய கம்பெனிகளுக்குச் சென்று உபாய

மாகச் சாமான்களை வாங்கி அந்தக் குறிப்பிட்ட தேதியை யுடைய பில்களை வாங்கி வைத்துக்கொண்டான். தினகா னுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அது ராஜசேகரனால் தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று சகஜமாக யாரும் நினைக்கலாமாயினும் தன்மீது குற்றம் சுமத்தினாலும் அதை ருஜுப்படுத்த முடியாது என்பதை அவன் அறிந்துகொண் டான். பொதுஜன அபிப்பிராயத்தைப்பற்றி அவனுக்குக் கவலை இல்லை. அவனுக்கு அவ்வளவு ஆஸ்தியும் இதர சௌகரியங்களும் கிடைக்கும்போது கேவலம் பொதுஜனங் கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அவன் ஏன் கவனிக் கப் போகிறான்.

தினகரனை அப்புறப்படுத்திவிடுவதனாலேயே சுந்தரம் பிரபு மனமுடைந்து இறந்துபோவா ரென்றும், ஒருகால் அவர் தப்பிப் பிழைத்தாலும் ஆட்களைக்கொண்டே அவரை யும் சரிப்படுத்திவிடலா மென்றும், பிறகு தன்னை யாரும் கேட்பாரில்லை யென்றும் எல்லா சொத்துக்களையும் அடைந்து விடலாமென்றும் தீர்மானித்துக்கொண்டான். நாம் மேலே கூறியவாறு அவனுடைய எண்ணத்தைச் சாதித்துக்கொள்ள அவனுக்கு ஆட்கள் இல்லாமல் போகவில்லை. பணமும் நான் காவது வருஷத்திய உபகாரச் சம்பளமாகிய முந்நூறு பவுனை யும் பெற்றதால் போதுமான அளவு இருந்தது. தான் நினைத்த காரியத்தை முடிப்பதற்காக என இரத்தினபுரியி லுள்ள காலிகள் வசிக்கும் இடத்தில் பெயர் பெற்றவனை ராட்சஸ குப்பன் என்பவனை ஏற்படுத்திக்கொண்டான். குப் பனுக்கு ராட்சஸ என்னும் பட்டப் பெயர் கிடைத்த காரணத் தைச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். குப்பனும் நல்ல அந் தஸ்திலிருந்த பெற்றோர்களுக்குப் பிறந்தவனே. அவனுக்கு அவனது பெற்றோர்கள் போதுமான அளவு நல்ல கல்வியை

யும் கொடுத்தார்கள். வியாபாரத் துறையில் அவனுக்குப் பயிற்சியும் செய்வித்தனர். ஆனால் அவன் தனது பதினெட்டு அல்லது பத்தொன்பதாவது வயதில் கடல் தாண்டி வேறு தேசம் செல்ல முயற்சித்தான். அவன் பிரயாணம் செய்த கப்பல் நடுக்கடலில் இருக்கும்போது புயலால் தாக்குண்டு மூழ்கிவிட்டது. அதில் பிரயாணம் செய்தவர்களில் பெரும் பான்மையோர் மூழ்கிவிட்டார்கள். ஏழெட்டு பேர்கள் மட்டும் தப்பித்து அங்கிருந்த ஒரு படகில் ஏறிக்கொண்டு அது எப்போது கரையை அடையுமோ என மிக ஆவலுடன் எதிர் பார்த்துவந்தனர். அந்த ஏழெட்டு பேர்களில் குப்பனும் ஒருவன். அப்படகு கரைசேர அதிக நாட்களானதால் அவர்களிடமிருந்த ஆகார வசதிகள் தீர்ந்துபோனதும் பசியினால் வாடலாயினர். அக்கொடுமையைத் தாங்கமுடியாமல் அவர்களுக்குள் ஒருவகை ஏற்பாடு செய்துகொண்டனர். அதாவது திருவுளச் சீட்டுபோட்டு யார் யார் பெயர்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருகிறதோ அவரவரும் அந்த முறைப்படி உயிர்த்தியாகம் செய்து மற்றவர்களுக்கு ஆகாரமாகவேண்டும் என்பதே. அவ்வாறே செய்ததில் முதல் நாள் ஒருவனுடைய பெயர் விழுந்தது. அவனும் உயிர் துறக்க ஒப்புக் கொண்டான். மற்றவர்கள் அவனைக் கொன்றும்விட்டார்கள், ஆயினும் அங்கிருந்தவர்களில் ஒருவனைத் தவிர மற்ற எல்லாருக்கும் திக்பிரமை சூழ்ந்துகொண்டுவிட்டது. மனம் துடிதுடித்தது. கைகால்கள் சோர்ந்துபோயின. எவ்வித மான ஆகாரமும் தேவை என்றே அவர்களுக்குத் தோன்ற வில்லை. ஆனால் அந்த ஒருவன் தவிர என்றதில் ஒருவன் என்பது நமது குப்பனே. அவன் மட்டுமே இறந்துபோன அம்மனிதனின் மாமிசத்தைத் தின்று பசியை ஆற்றிக் கொண்டான்.

அவன் அவ்வாறு நின்ற இரண்டொரு மணி நேரத்துக்குள் அவ்வழியே ஒரு கப்பல் வந்தது. உடனே படகில் இருந்தவர்கள் அக்கப்பலில் ஏறிக்கொண்டார்கள். ஆயினும் அந்த ஆளை அவர்கள் கொல்வதற்கு முன்னரே, அக்காரியத்தை யாரும் எங்கும் சொல்லலாகாது என்று அவர்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டபடியாலும், கப்பல் சமீபத்தில் வருவதற்கு முன் படகில் கொலை நடந்த சங்கதியே தெரியாதபடி எல்லாம் சுத்தம் செய்யப்பட்டு விட்டிருந்தபடியால் படகில் நடந்த சமாசாரம் வெளியாகவே இல்லை. சில நாட்களுக்குள் அக்கப்பலும் இரத்தினபுரியை அடைந்தது. குப்பன் தன் இடத்தில் வந்து பார்த்ததில் தான் போய்விட்ட துக்கத்தின் காரணமாகத் தன் பெற்றோர்கள் இறந்துவிட்டதைத் தெரிந்துகொண்டான். ஆகவே அவன் திக்கற்றவனும் கேட்பாரற்றவனும் திரியலானான். மிகக் கேவலமானவர்களுடைய சகவாசம் ஏற்பட்டுவிட்டது. காலிகளில் பெரிய காலியாய்ப் போனான். அத்தகைய தொழில் ஏதேனும் செய்தாலொழிய அவனுக்கு ஜீவனத்துக்கே வழியில்லாமற் போய்விட்டது. மற்றவர்களைவிட அவன் ஆற்றலுடையவனும், செல்வாக்குடையவனும் இருந்தபடியால் அவனே அக்கூட்டத்தாரின் தலைவனானான். இதற்கிடையில் படகில் நடந்த கொலை சமாசாரம் ஜனங்களுக்கெல்லாம் எப்படியோ தெரிந்துவிட்டது. அப்படகிலிருந்த சிறு தொகையினருள் யாரேனும் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்க வேண்டும் அல்லது அவனே தன் பெருமையைச் சொல்லிக்கொள்வதற்காக அதைத்தன் கூட்டத்தாரிடம் தெரிவித்திருக்கவேண்டும். எப்படியோ சமாசாரம் வெளியாய்விட்டது. குப்பன் தன்னைப் போன்ற ஒரு மனிதனுடைய மாமிசத்தைத் தின்றுனதலால் அவனுக்கு ராட்சஸ குப்பன் என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று.

இப்படிப்பட்ட பயங்கர சரிதையை ஆதாரமாகக் கொண்ட ஒரு போக்கிரியையும் அவனுடைய ஆட்களையும் நமது ராஜசேகரன் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளத் துணையாகக்கொண்டான். ராட்சஸ குப்பனுக்கு அப்போது வயது இருபத்துநான்கு, அவன் நடுத்தரமான உயரமுடையவனுகவும், நல்ல தேகக் கட்டுடையவனுகவும் இருந்தான். அவனுடைய தோற்றமே மிக்க பயங்கரமானதாக இருந்தது. அவன் ஒன்றும் குற்றமே செய்யவில்லையென்றாலும் அவன் குற்றத்தைச் செய்ததாக யாரேனும் சொல்லிவிட்டால் உடனே அதைப் பலரும் நம்பிவிடும்படியான கோரரூபத்தையுடையவனுக இருந்தான். ஒரு பெருங் கூட்டத்தில் மிக்க தைரியசாலியான ஒருவன் அவன் முகத்தைக் கண்டமாத்திரத்தில் தனக்கும் தெரியாமலே நடுநடுங்குவான். ராஜசேகரனுக்குக்கூட அவனைக் காணும்போதும் அவனுடன் பேசும்போதும் அச்சமாகவே இருக்கும். எனினும் தன் காரியத்தை முடிப்பதற்கு அவனே ஏற்ற மனிதனுதலால் அவனுடன் தாராளமாகக் கலந்து பேசவேண்டியதாயிற்று.

ராஜசேகரன் ராட்சஸ குப்பனுடன் எல்லா ஏற்பாடுகளையும் பற்றிப் பேசி முடிப்பதற்குள் முதலில் அனுப்பப்பட்ட ஆள் திரும்பிவந்து தினகரன் என்னும் குழந்தையை அப்புறப்படுத்துவதில் எத்தகைய சிரமும் இராதென்றே தெரிவித்தான். அதன்மீது குப்பன் மற்றும் மூன்று ஆட்களுடன் இரத்தினபுரியினின்றும் கிருஷ்ணகிரிக்குப் புறப்பட்டான். ஆனுல் அந்த நால்வரும் ஒரே வழியாகப் போகவில்லை. சந்தேகம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியாகப் போய்க் கடைசியில் குறிப்பிட்ட ஓரிடத்தில் கூடுவதெனத் தீர்மானித்துக்கொண்டனர். கிருஷ்ணகிரி ஜமீனில் குழந்தையின் தாதிகள் அதை மாலை நேரங்களில் காற்

றுக்காக வெளியே எடுத்துச் செல்லும்போது இந்த ஆட்கள் தந்திரமாக அக்குழந்தையைப் பிடுங்கிக் கொண்டுபோய் மறைவாகக் கொன்றுவிட்டுப் பிறகு அதன் பிரேதத்தை ஒரு பகிரங்க ரஸ்தாவில் பலரும் எளிதில் பார்க்கும்படியான இடத்தில் போட்டுவிட வேண்டுமென்று ராஜசேகரன் குப்ப னிடம் தெரிவித்தான். அக்குழந்தை இறந்துவிட்டதென் னும் உண்மை பகிரங்கமாக எல்லாருக்கும் தெரிந்துவிட வேண்டுமென்பது ராஜசேகரனின் எண்ணம். இத்தொழி லைச் செய்வதற்காகச் செல்பவர்கள் அங்கிருந்து எத்தகைய கடிதமும் எழுதக்கூடாதென்றும், ஒரே யடியாகக் காரியத் தை முடித்துக்கொண்டு வந்து தன்னிடம் தகவல் தெரிவிக்க வேண்டுமென்றும் கூறினான். ஆகவே அவர் சென்றபின் பத்து நாட்கள் வரை அவனுக்கு அவர்களுடைய செயலைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. பிறகு ராட்சஸ குப்பன் கிருஷ்ணகிரியிலிருந்து இரத்தினபுரிக்குத் திரும்பிவந்துவிட்ட தாக ராஜசேகரன் அறிந்துகொண்டு அக்குப்பன் வசிக்கும் இடத்துக்குச் சென்றான். குறிப்பிட்ட இடத்தில் குப்பன் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தான். அவனுடைய முகத் தோற்றத்திலிருந்து தான் மேற்கொண்ட காரியம் சாதித்து விட்டானு இல்லையா என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. சிலர் ஏதேனும் தவறுதலைச் செய்துவிட்டால் அவர்க ளுடைய முகத்திலிருந்தே அவர்களது மனோபாவத்தை அறிந்துகொண்டுவிடலாம். ஆனல் அப்படிப்பட்ட தவறான செயல்களில் நன்கு தேர்ச்சிபெற்றவர்களின் முகத்தில் எப் படிப்பட்ட பீதியும் தோன்றாது. ஒன்றும் தெரியாதவர்கள் போலத்தான் காணப்படுவர். அதாவது அவ்வளவு பண்பட் டவர்களாகி விடுகிறார்கள்.

குப்பன் மேற்கொண்ட வேலை எவ்வாறாக முடிந்ததென்

பதைத் தெரிந்துகொள்ள ராஜசேகரன் மிக்க ஆவலுடையவ னாக இருந்தபடியால் உடனே அவனிடம், "காரியத்தை முடித்துவிட்டாயா?" என்று கேட்டான். அதற்கு அவன், "காரியம் நன்ருகவே முடிக்கப்பட்டுவிட்டது. அதை மீண் டும் செய்யவேண்டுமென நீ விரும்புகிருயா?" என்ருன். அப்போது ராஜசேகரன், "அப்படியானுல் நீ செய்துமுடித்த வேலையை விவரமாகச் சொல் பார்க்கலாம்" என்று விசாரித் தான். அதற்கு குப்பன், "விவரம் மிகச் சுருக்கமானது நானும் மற்றவர்களும் குறிப்பிட்ட இடத்தில் சந்தித்து இன் னின்னமாதிரி காரியத்தைச் செய்வதென யோசித்து முடிவு செய்துகொண்டு அங்கிருந்து பிரிந்து சுந்தர விலாச மாளி கைக்கருகில் சௌகரியமான இடங்களில் ஒளிந்துகொண் டிருந்தோம். ஆனுல் நம்முடைய காரியத்தைச் சாதிக்க, நாம் அங்குசென்றதிலிருந்து மூன்று அல்லது நான்கு நாட் கள்வரை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஏனெனின் அந்த மூன்று, நான்கு தினங்கள்வரை தினசரி குழந்தையை மாலே நேரங்களில் தாதிமார் அழைத்துவரும்போது சுந்தரம் பிரபு வும், ஹேமவதியம்மாளும் கூடவேவந்தார்கள். அதிருக்கட் டும்; அந்த அம்மாள் மிக்க அழகாக இருக்கிருள் அல்லவா? அவள் உனக்கும் தெரியும்போலிருக்கிறதே" என்று சொன் ஞன்.

ராஜசேகரன்:—நான் அந்த அம்மாளைச் சில வருஷங்க ளுக்குமுன் பார்த்திருக்கிறேன். இப்போது அதைப்பற்றி நமக்கென்ன, நமக்கு ஆகவேண்டிய வேலே சம்பந்தமாய் நடந் ததைத விவரமாகச் சொல்.

குப்பன்:—அப்படியானுல் சரி! ஐந்தாறு தினங்களாகி யும் எங்களால் ஒன்றும் செய்யமுடியாமலிருந்தது. எனக்கு அதிக கவலே ஏற்பட்டுவிட்டது. ஏனெனின், நானும் என்னு

டன் வந்தவர்களுமாக நான்கு பேர் தினசரி அம்மாளிகைக் கருகில் சுற்றிக்கொண்டிருந்தால் யாரேனும் சந்தேகப்பட மாட்டார்களா? ஆகவே நான் அவர்களையெல்லாம் வெகு தூரத்தில் அனுப்பிவிட்டு நான்மட்டுமே அவ்வேலையைச் செய்வதென அங்கு நின்றேன். அதிர்ஷ்டவசமாய் அதற் கடுத்த நாள் மாலை மூன்று மணிக்கெல்லாம் இரண்டு தாதிமார் ஆற்றோரமாக நடந்து வந்தார்கள். அவர்களுடன் அம் மூன்று குழந்தைகளும் இருந்தன. அத் தாதிமார்களில் ஒருத்தி ஆண் குழந்தையை இடுப்பின்மீது வைத்துக்கொண் டிருந்தாள். மற்றொரு தாதி இரண்டாவது குழந்தையை இடுப்பின்மீது வைத்துக்கொண்டபடியே முதல் குழந்தை யைக் கையால் பிடித்து நடத்திச்சென்றாள். காடுகளிலுள்ள துஷ்ட மிருகங்கள் அவ்வழியே செல்லும் மக்கள்மீது பாய் வதேபோல், தாதியின்மீது பாய்ந்து குழந்தையைக் கைப்பற் றிச் செல்ல சமயம் பார்த்துக்கொண்டே அடர்ந்த மரங்க ளின் மத்தியில் மறைவாகப் பதுங்கியிருந்தேன். நல்ல கால மாக ஆண் குழந்தையை எடுத்துக்கொண் டிருந்தவள்தான் முதலில் வந்துகொண்டிருந்தாள். மற்றொருத்தி அவளுக்குப் பின்னால் சிறிது தூரத்தில் மெதுவாக நடந்துவந்துகொண் டிருந்தாள். நானும் அத்தகைய நிலைமையையே எதிர்பார்த் துக்கொண் டிருந்தேன். முதலில் வந்தவவள் ஒரு தோட் டத்தின் மற்றொரு பக்கமாகத் திரும்பியதால் பின்னால் வந்த வள் அவளைப் பார்க்கமுடியாத சந்தர்ப்பம் ஏற்பட் டிருந்தது. நானும் அதுதான் ஏற்ற சமயமெனக் கருதி, என் முகத்தில் கருப்பு முக மூடியை அணிந்தவண்ணம் ஒரே பாய்ச்சலாய் அவள்மீது பாய்ந்து அக்குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு விட்டேன். அத்தாதி அவளை யாரோ சுட்டதுபோல் திடு மென்று மயக்கமாய்க் கீழே விழுந்துவிட்டாள். அவள்

இறந்தேவிட்டாளா அல்லது ஸ்மரணை மட்டும் தப்பிற்று என்பதும் எனக்குத் தெரியாது. அதைப்பற்றி எனக்கென்ன கவலை. மேலும் அதைப்பார்க்க நான் காத்திருக்கவில்லை என்பதை நீ தெரிந்துகொள்.

ராஜசேக:—சரி! நடந்த விஷயத்தைச் சொல். பூரா விவரமும் அறிய மிக ஆவலாய் இருக்கிறது.

குப்பன்:—நான் உடனே அங்கிருந்து அக் குழந்தையுடன் ஒரே ஓட்டமாய் ஓடி நதியை யெல்லாம் கடந்து ஒரு தோட்டத்தில் சென்று தங்கினேன். அங்கேயே என் வேலையை முடித்து விடுவதென நினைத்து நான் எடுத்துச் சென்றிருந்த விஷத்தை அதன் வாயில் மூன்றுமுறை ஊற்றினேன். அத்துடன் காரியம் முடிந்துவிட்டது.

ராஜசேக:—அப்பாடா! அப்படியானால் ஒருவாறு காரியத்தை முடித்துவிட்டாய்போலும்!

குப்பன்:—நீ முதலில் இங்கு வந்தபோதே என் என் சொல்லை நம்பியிருக்கக்கூடாது. என்னைப்போன்ற ஒருவனுக்கு அக்குழந்தை சரியான உணவாகவுங் கூடும் என்பதை நீ அறியாயோ?

ராஜசேக:—இல்லை, இல்லை, நான் உன்னிடம் சந்தேகங்கொண்டு அப்போதும் ஒன்றும் பேசவில்லையே. சரியான விவரத்தைத் தெரிந்துகொள்வதற்காக அவ்வாறுகேட்டேன்.

குப்பன்:—என்னுடைய கௌரவத்தைப் பங்கப்படுத்துவதற்கு நீ கேட்டதே போதாதா? என்போன்றவர்களுக்கு இது ஒரு பெரிய காரியமா? அதிலும் சந்தேகப்பட்டால் எனக்குக் கௌரவக் குறைவுதானே.

ராஜசேக:—சரி! அக்குழந்தையின் பிரேதத்தை என்ன செய்தாய்? அதை எங்கேபோட்டு விட்டாய்?

குப்பன்:—நான் ராத்திரி வரையில் அங்கேயே காத்திருந்து நன்றாக இருட்டானபின் அப்பிணத்தை எடுத்துச் சென்று சுந்தர விலாச மாளிகைக்கு ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள ஒரு சிறு வீட்டின் எதிரில் பகிரங்க ரஸ்தாவில் போட்டுவிட்டேன்.

என்று கூறிக்கொண்டே தான் சொன்னதை ருஜுப்பிக்கும்பொருட்டு அக்குழந்தையின்மீது இருந்த சொக்காயைக் காண்பித்தான். இராஜசேகரன் உடனே அதைப் பிடுங்கிக் கொண்டு அதில் பிரபு வீட்டின் அடையாளமாக ஏதேனும் குறி இருக்கிறதா என்று கவனித்தான். அதில் அக் குடும்பத்திற்குரிய அடையாளங்கள் காணப்பட்டதுடன் 'தினகரன்' என்றும் எழுதியிருந்தது. அப்போது குப்பன் ராஜசேகரனிடம், "இப்போதேனும் உனக்குத் திருப்தி ஆயிற்றா? இன்னும் சில விஷயங்களை சொல்கிறேன் கேள். அக் குழந்தையின் உடம்பினின்றும் அதன் சொக்காயைக் கழற்றிய போது அதன் தோள்மீது சூரியனைப்போன்ற ஒரு மச்சம் இருப்பதையும் பார்த்தேன்" என்றான்.

ராஜசேக:—சரி! எனக்குத் திருப்தியாய்விட்டது. எவ்வித சந்தேகமும் இல்லை. இதோ இச்சொக்காயை எடுத்துக் கொள். அதை உன் இஷ்டப்படி செய்துகொள்ளலாம். அதை எரித்துவிடுவதே நலமென நான் கருதுகிறேன்.

குப்பன்:—அதை என்னிடம் கொடுத்து விடு. நான் பார்த்துக்கொள்கிறேன். என்ன செய்யவேண்டுமென்பது எனக்குத் தெரியும். என்னால் ஆகவேண்டிய காரியம் இன்னும் ஏதேனும் இருக்கிறதா? உத்தரவு கொடுத்தால் எதையும் சாதிக்கத் தயாராக இருக்கிறேன்.

ராஜசேக:—இப்போது ஒருவேலையுமில்லை. ஆயினும் இன்னும் இரண்டொரு வாரத்தில் எனக்கு உன் உதவி

வேண்டியதாகத்தான் இருக்கும். அப்போது நான் அழைத்ததும் நீ வரவேண்டும். ஆதலின் எங்கும் போய்விடாதே. என்னை அப்போதைக் கப்போது வந்து பார்த்துக்கொண்டிரு.

குப்பன்:—நீ எப்போது இங்கேவந்தாலும் என்னைப்பற்றிய முழுவிவரத்தையும் அறிந்துகொள்ளலாம். ஆனால் இங்கு வந்து குப்பன் என்று கேட்டால் யாருக்கும் தெரியாது. 'பெருத்த கிடா' என்று கேட்கவேண்டும். ஞாபகமிருக்கட்டும்.

ராஜசேகரன் அப்படியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டு, குப்பனுக்குக் கொடுக்கவேண்டிய சன்மானத்தைக் கொடுத்துவிட்டான். அவனும் அதையெடுத்து தன் ஜேபியில் போட்டுக்கொண்டு தன் சந்தோஷத்தைத் தெரிவித்தான். பிறகு அவ்விருவரும் பிரிந்துவிட்டார்கள். ராஜசேகரன் நேராகத் தனக்குப் பழக்கமான ஒரு விபசாரியின் வீட்டுக்குச் சென்றான். குப்பனே தான் சம்பாதித்த பணத்தில் ஒரு பாகத்தைச் செலவுசெய்ய மதுபானக் கடைக்குச் சென்றான்.

கேவலம் ஒருவருடைய சொத்துக்களைப் பெறுவதற்காக ஆண்டவனால் படைக்கப்பட்ட ஒரு உயிரை மாய்ப்பது தருமமாகுமா? இதற்காகத்தான் நமது பெரியோர்கள் மண் பெண், பொன் ஆகிய இம்மூன்றிலும் மானிடர் அதிகமாக பற்று வைக்கக்கூடாதெனக் கூறியிருக்கின்றனர். ஒரு கொலையோ களவோ நிகழுமாயின் அதற்குக் காரணம் பெண்ணும் பொன்னுமாகத்தான் இருக்கவேண்டு மென்பதே பிரபல நீதிபதிகளின் அபிப்பிராயமாகும். ஆயினும் இதற்காக நாம் மாதர்களை விவாகம் செய்து கொள்ளாமல் சந்நியாச வாழ்க்கையை மேற்கொள்வதோ, ஒரு பைசாவும் சம்பாதிக்

காமல் சோம்பேறியாய்க் கிடப்பதோ தகாது. இல்லற இன்ப வாழ்க்கைக்கு அவசியமான பொருளை சரியான வழியில் பெற்று மனத்துக்கேற்ற மாதை மணந்து குடும்ப வாழ்க்கையை நலம்பெற நடத்தவேண்டும். அவரவரும் தன்வரை ஒழுங்கான வாழ்க்கையை நடத்தினுல் உலகத்திலேயே எத்தகைய தொல்லையும் இராது. அனைவருக்குமே உலக வாழ்க்கை இன்பமானதாகத் தோன்றுமென்பதில் ஐயமில்லை.

3-வது அத்தியாயம்

ஆஸ்திக் குரிய வாரிசுதார்

இப்போது நாம் கிருஷ்ணகிரி 'சுந்தரவிலாச மாளிகை'யில் தினகரன் என்னும் குழந்தை களவு போனதால் எப்படிப்பட்ட துக்கம் நிறைந்திருக்கிறதென்பதைக் கவனிப்போம். ராட்சஸ குப்பன் ராஜசேகரனிடம் தான் செய்து முடித்த காரியத்தைப்பற்றி விவரமாகக் கூறியதுபோலவே தினகரனை அன்று மாலையில் எடுத்துச் சென்ற தாதியும் குழந்தை பறிபோனதன் சம்பந்தமாய் நடந்த எல்லா விவரங்களையும் சுந்தரம் பிரபுவினிடமும் ஹேமவதியிடமும் கூறினுள். குப்பன் தாதியினிடமிருந்து குழந்தையைப் பிடுங்கியதும் அந்த தாதி பீதியால் ஸ்மரணை தப்பிக் கீழே விழுந்துவிட்டாள். அவள் அவ்வாறு விழும்போது ஓவென்று கதறி இருக்கிறுள். இச் சத்தத்தைக் கேட்ட மற்றொரு தாதி மிக்க அவசரமாக ஓடிவந்து பார்த்ததில் முன்னவள் கீழே விழுந்திருப்பதையும் யாரோ ஒருவன் அதிக தூரத்தில் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடுவதையும் கண்டு திகிலடைந்

தாள். தாதி இறந்துவிட்டாளோ என்றும் நினைத்தாள். ஆனால் தெய்வாதீனமாய்ச் சொற்ப நேரத்துக்கெல்லாம் அத் தாதி ஸ்மாரணை பெற்று எழுந்ததும் அவள் இறக்கவில்லையென்றும், மயக்க மடைந்திருக்கிறாளென்றும் தெரிந்துகொண்டு தன் கைக்குட்டையை ஆற்று ஜலத்தில் தோய்த்து அத் தண்ணீரை அவள் முகத்தின்மீதுபோட்டு அவள் நன்றாக ஸ்மாரணை யடையும்படி செய்தாள். பிறகு அந்த இரு தாதிகளும் மீதி இரண்டு குழந்தைகளுடன் மிக அவசரமாக மாளிகைக்குச் சென்று இந்தப் பயங்கர சமாசாரத்தை விவரமாகக் கூறினார்கள்.

இந்த துக்க சமாசாரத்தைக் கேட்டதும் சுந்தர விலாச மாளிகை முழுதும் துக்கமயமாகவே இருந்தது. ஹேமவதியம்மாள் முதலில் சிறிது நிதானமாகத்தான் இருந்தாள். ஆனால் சுந்தரம் பிரபு துக்கம் தாளாமல் அழ ஆரம்பித்து விட்டபடியால் எல்லாரும் அவ்வாறே துக்கப்படலாயினர். ஆயினும் ஹேமவதி மிக்க பொறுமையுடன் சமாளித்துக் கொண்டு பல ஆட்களையும் நாலுபக்கங்களுக்கும் அனுப்பிக் குழந்தையைத் தேடச் சொன்னாள். சிலர் கால் நடையாகவும் சிலர் குதிரைமீதும் சென்றார்கள். இவ்வாறு பொறுமையுடன் வேலைக்காரர்களை அனுப்பிய பின்னர் அவள் தன் கணவனைத் தேற்றுவதில் கவனம் செலுத்தலானாள். அவரிடம், தான் அக்குழந்தையைத் தேடுவதற்கான பல ஏற்பாடுகளையும் செய்திருப்பதாயும், இவ்வளவு முயற்சிக்குப் பின்னர் குழந்தை அகப்படாமல் போகாதென்றும் தேறுதல் கூறினாள். ஆனால் அவளுடைய மனதில் மட்டும் அச்சமும் சந்தேகமும் அதிகரித்துக் கொண்டுதான் இருந்தது. ஏதோ அபாயம் ஏற்பட்டு விட்டதென்றே நிச்சயமாக நம்பினாள். அவளும் அவளுடைய கணவனான சுந்தரம் பிரபுவும் இயற்கையாகவே

ராஜசேகரன் மீதுதான் சந்தேகம் கொண்டார்கள். ஆயினும் சுந்தரம் பிரபுமட்டும், ராஜசேகரன் இவ்வாறு செய்திருப்பானு என்று சிற்சில சமயங்களில் சந்தேகப் படுவதுண்டு. இத்தகைய சந்தேகம் ஹேமவதிக்கு இல்லவே இல்லை, அவன்தான் குழந்தையைத் தூக்கிக்கொண்டு போக ஏற்பாடு செய்திருக்கிறுனென நிச்சயித்தாள்.

அவர்களிருவருக்கும் ஒரு நிமிஷம் கழிவது ஒரு யுகம் போல் தோன்றிற்று. தேடப்போன ஆட்கள் என்ன சங்கதி கொண்டு வருவார்களோ என்று ஒவ்வொரு நிமிஷமும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். பின்னர் சேவகர்கள் ஒவ்வொருவராகத் திரும்பிவர ஆரம்பித்தார்கள். ஆனுல் ஒருவராவது குழந்தை களவு போனதன் சம்பந்தமாய் ஒரு மயிரிழை உளவுகூட கண்டுபிடிக்கவில்லை. பிறகுதான் சுந்தரம் பிரபுவும் இந்தக்கொடிய சூழ்ச்சியை ராஜசேகரன்தான் செய்திருக்க வேண்டுமென்று நிச்சயித்தார். ஒவ்வொருவராக் வந்து சேர இரவு நடு நிசியாயிற்று. கடைசி மனிதன் வந்தான். ஆயினும் மற்றவர்களைப் போலவே வெறுங் கையை விரித்தான். இதனுல் வயதான பிரபுவின் துக்கம் அதிகரித்து விட்டது. ஹேமவதி மன உறுதி யுடையவளென்றுலும் எல்லா சேவகர்களும் திரும்பி வந்தும் ஒரு செய்தியும் தெரியாமற் போகவே அவளும் தன் மனேதைரியத்தை இழந்து துக்கக்கடலில் மூழ்கலானுள். ஆகவே சிறிது நேரம் வயது சென்ற பிரபுவும் இளம் வயதினளான மனைவியும் ஒன்று கூடி பெருமூச்சு விட்டார்கள். அழுதார்கள், புரண்டார்கள். என்ன பயன்?

சொற்ப நேரத்துக்கெல்லாம் ஹேமவதி சமாளித்து எழுந்துகொண்டு துக்கத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டவளாய்த் தன் கணவனுக்கும் தேறுதல் கூற முயன்றுள். இந்த

சூழ்ச்சிக்கெல்லாம் கர்த்தாவாகிய ராஜசேகரன் குழந்தையைக் கொன்று விடக்கூடிய துணிச்சலே யடைந்திருக்க மாட்டானென்றும், புரபுவைத் தன் வழிக்குக் கொண்டு வரும் பொருட்டு குழந்தையை எடுத்துக்கொண்டு போவதற்கு மட்டும் ஏற்பாடு செய்திருப்பானென்றும் பிரபுவினிடம் தெரிவித்தாள். சிறைப்பொருள் கொடுப்பதாகச் சொன்னல் அவன் அக்குழந்தையை மீண்டும் ஒப்பித்தாலும் ஒப்பித்து விடலாம் என்னும் சந்தேகம் தெரிவித்தாள். சுந்தரம் பிரபுவுக்கு ஹேமவதி கூறியதில் நம்பிக்கை ஏற்படவில்லையென்றாலும் ஒருவாறு அவள் கூறுவதும் மெய்யாக இருக்குமோ என்று நினைத்து மனத்தில் தேறுதல் கொண்டார். இவ்வாறாக அன்றிரவு முழுதும் கழிந்து விட்டது. அன்றிரவு முழுதும் அத்தம்பதிகள் தங்கள் தலையைத் தரையில் வைக்கவேயில்லை. அதாவது படுக்கவுமில்லை, தூங்கவுமில்லை, எப்படித்தான் தூக்கம் வரும் பாவம்! இரவு முழுதும் துக்கத்துடனேயே இருந்தார்கள். மறுநாட்காலையும் எல்லா வேலைக்காரர்களும் குழந்தையைத் தேடுவதற்காகவும், அக்கம் பக்கத்தில் விசாரிப்பதற்காகவும் புறப்பட்டார்கள். அந்த ஒரு நாளைக்குள் சேவகர்கள் சுமார் பன்னிரண்டு மைல் சுற்றுப் புறத்திலுள்ள கிராமங்களிலும், தோட்டங்களிலும், தனித்தனி குடிசைகளிலும் தேடிப் பார்த்தார்கள். இரவில் பழையபடி எல்லாரும் திரும்பி வந்தார்கள். அவர்கள் அன்று பகல் முழுதும் சுற்றிப்பார்த்ததன் பயனுக, சில தினங்களாக யாரோ துஷ்டர்களைப் போன்ற சிலர் அப்பக்கத்தில் சுற்றித் திரிந்து கொண்டிருந்ததாகவும், ஆனல் திடீரென்று அவர்கள் காணப்படவில்லையென்றும் தெரிந்தது. அது தவிர குழந்தை கொல்லப்பட்டதா அல்லது உயிருடன் இருக்கிறதா என்பது ஒன்றும் தெரியவில்லை. ஆனல் ராஜசேகரன் அப்பக்கத்தில்

எல்லாருக்கும் தெரிந்தவனுதலால் அவன் அங்கு எங்கேனும் காணப்பட்டானு என்று விசாரித்ததில் ஒரே யடியாக அவன் வரவேயில்லை என்று எல்லாரும் சொல்லி விட்டார்கள்.

பிறகு எவ்வாறு நடந்து கொள்வது? என்ன செய்வது? என்பதுபற்றி ஹேமவதி ஒரு முடிவுக்கு வரலானுள். அவள் உடனே இரத்தினபுரிக்குப் போவதாகத் தெரிவித்தாள். பகிரங்கமாகப்போய் ராஜசேகரனுடன் போர் தொடுப்பதென்று நினைக்கவில்லை. ஆனுல் மாறுபெயருடனும் வேஷத்துடனும் இரகசியமாகச் சென்று தன் குழந்தையைப்பற்றிய தகவலைத் தெரிந்து கொள்வதென நிச்சயித்தாள். சுந்தரம் பிரபுவும் அவளுடன் வருவதாகச் சொன்னுர். ஆனுல் அவள் அதைத் தடுத்துவிட்டாள். சுந்தரம் பிரபு இரத்தினபுரிக்கு வந்தால் அதை ரகசியமாய் வைத்துக்கொள்ள முடியாது என்பதும், கிருஷ்ணகிரியிலும் குழந்தையைத் தேடும் முயற்சி நடைபெறவேண்டும் என்பதுமாகிய இருகாரணங்களுக்காக அவர் இரத்தினபுரிக்கு வரக்கூடாதென ஹேமவதி கூறி விட்டாள். மேலும் குழந்தையைக் களவாடிச் சென்ற ராஜசேகரன் சமாதானத்துக்கு வருவதற்காக ஏதேனும் ஆளையோ, கடிதத்தையோ அனுப்பினுலும் அதைப் பெற்றுக்கொண்டு மேற்கொண்டு வேலை நடத்துவதற்காக பிரபு கிருஷ்ணகிரியிலேயே இருக்கவேண்டுமென்றும் அவள் நினைத்தாள். ஏனெனின் இந்த சூழ்ச்சிக்கே ராஜசேகரன்தான் காரணமென்பதும், அதுவும் தன் பெரியப்பாவை வழிக்குக் கொண்டுவரவே அவன் அவ்வாறு செய்திருக்கிருனென்பதும் அவளுடைய திடமான அபிப்பிராயமாகும். சுந்தரம் பிரபு தன் அருமை மனைவியை விட்டுப் பிரிய முடியாத அளவு துக்கமுடையவராய் இருந்த போதிலும், அவள் போட்டிருந்த திட்டம் மிகச் சரியானதாக இருந்தபடியால் அதைத் தடுப்பதற்கு அவரால் முடியாமற் போய் விட்டது.

ஹேமவதியின் அந்தரங்க வேலைக்காரி சுமார் முப்பது வயதுடையவள். அதிக புத்திசாலியாயும், நிதான சுபாவமுடையவளாவும் இருந்தாள், அவளை நம்பி எக்காரியத்தையும் ஆரம்பிக்கலாம். எப்படிப்பட்ட வேலையிலும் அவள் துணையாக இருந்தாளாயின் அக்காரியத்தை எளிதில் சாதித்துக் கொள்ளலாம். அவள் அவ்வளவு மனோ உறுதி யுடையவளாயும் தைரிய முடையவளாயும் இருந்தாள். ஆகவே ஹேமவதி தன்னுடன் தன் அந்தரங்க வேலைக்காரியாகிய மந்தரையையும் அழைத்துச் செல்வதென முடிவு செய்தாள். ஒரு சாதாரண வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, தங்களுக்கு அவசியமான சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு மிக்க ஏழைகளைப்போல் மாறு பெயருடனும் வேஷத்துடனும் இரகசியமாகவே இரத்தினபுரிக்கு ஹேமவதி தன் வேலைக்காரி மந்தரையுடன் புறப்பட்டாள்.

அம்மாதர்க ளிருவரும் இரத்தினபுரிக்குப் போய்ச் சேர்ந்த இரண்டு தினங்களுக்குப் பின்னர் சுந்தரம் பிரபுவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் ஹேமவதி, தான் வசந்தை என்னும் பணக்கார விதவையின் வீட்டை வாடகைக்கு வாங்கி இருப்பதாகவும், அது சிறியதும் பார்வைக்கு அழகான வீடென்றும், தான் சொர்ணம் என்னும் மாறு பெயருடன் இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது. பிறகு ஒருவாரம் கழிந்ததும் மற்றொரு கடிதம் பிரபுவுக்குக் கிடைத்தது. அதில் முக்கியமான ஒரு விஷயத்தைக் கண்டு பிடித்திருப்பதாகவும், சந்தோஷச் செய்தி கிடைக்குமென எதிர்பார்க்கலாமென்றும், ஆயினும் அப்போதே விவரமாக ஒன்றும் தெரிவிக்க முடியாதென்றும், கடிதம் வேறு யாரிடமேனும் அகப்பட்டு விட்டால் என்ன செய்வது என்பதுமட்டுமேயன்றித் தான் விஷயத்தைக் கண்டு பிடிப்பதிலேயே ஒவ்வொரு நிமிஷத்தை

யும் செலவழிப்பதால் விவரம் எழுத சாவகாசமில்லை யென்றும் கண்டிருந்தது. மற்றும் சில தினங்கள் கழிந்தபின்னர் பிரபுவுக்குக் கிடைத்த கடிதத்தில் அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமான குழந்தை உயிருடனேயே இருக்கிறதென்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டதென்றும், ஆனால் குழந்தை இன்னும் அகப்படவில்லை யென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இக்கடிதங்களில் காணப்படும் விஷயத்தை யாரிடமும் சொல்லக்கூடாதென்றும் அவள் பிரவுக்கு எழுதியிருந்தாள். பிரபு மனச் சோர்வு அடைந்துவிட்டபடியாலும், தனக்குப்பின் வாரிசாக வரவேண்டிய ஆண் மகவு காணமற் போய்விட்டதே என்னும் காரணத்தாலும் அவர் நோயால் படுத்துக்கொண்டு விட்டார்.

சுந்தரம் பிரபுவுக்குத் தேக அசௌக்கியம் அதிகமாய் விடவே வழக்கப்படி குடும்ப வைத்தியரையும், ஹேமவதியின் தந்தையாரான கோவிந்தானந்தரையும் மற்றும் அபிமான முள்ளவர்களையும் வரவழைத்தார்கள். அவர்களெல்லாம் வந்து பிரவுக்கு வேண்டிய சிஷ்ருஷைகளைச் செய்துவந்தார்கள். அவர்கள் ஹேமவதிக்கும் கடிதம் எழுதி விஷயத்தைத் தெரியப்படுத்திவிடுவது நலமென எவ்வளவோ சொல்லியும் பிரபு அவ்வாறு எழுதுவது கூடாதென மறுத்துவிட்டார். ஏனெனின் அவள் இரத்தினபுரியில் குழந்தையைத் தேடுவதில் வெற்றியடைந்து கொண்டிருக்கும்வேளையில் அதை விட்டுவிட்டு அவள் திடீரென்று கிருஷ்ணகிரிக்கு வந்துவிடக் கூடாதென்பது அவரது கருத்து. ஒருவாரம் அல்லது பத்து தினங்களுக்குள் அவரது தேகமும் ஒருவாறு சன்னிலையை யடைந்தது. அச்சமயத்தில் பிரபுவுக்கு இரத்தினபுரியிலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதில் காணமற்போன குழந்தை இருக்கிற இடம் தெரிந்துவிட்டதென்

றும், ஆனால் சில சந்தர்ப்பங்களையொட்டி அவ்விஷயத்தில் மாஜிஸ்ட்ரேட்டின் உதவியைப்பெற முடியவில்லை யென்றும், எனினும் விரைவில் குழந்தை கைக்கு வந்துவிடுமென்றும் எழுதியிருந்தாள். எப்படி துக்கச் செய்தியைத் திடீரென்று கேட்டமாத்திரத்தில் இரத்த ஓட்டம் நின்றுபோய் அதனால் வியாதியும் மரணமும் ஏற்படுகிறதோ அதுபோலவே சந்தோஷச் செய்தியைத் திடீரென்று கேட்பதாலும் அதேமுடிவு உண்டாதல் ஆச்சர்யமன்று. ஒரு பரம ஏழைக்கு, அவன் எதிர்பாராதவகையில், ஒரு லாட்டரியில் லட்சம் ரூபாய் கிடைத்துவிட்டதென்னும் செய்தியைக் கேட்டமாத்திரத்தில் அவன் இறந்துவிட்டானென்னும் சங்கதி பத்திரிகைகளில் வெளியாயிருப்பதை நேயர்கள் அறிந்திருக்கலாம்.

அவ்வாறே குழந்தை இருக்கிற இடம் தெரிந்துவிட்டது என்னும் சந்தோஷச் செய்தியும், சுந்தரம் பிரபுவின் காயலாவை அதிகப்படுத்தி விட்டதேயொழியக் குறைத்த பாடில்லை. அப்போதாவது ஹேமவதிக்குக் கடிதம் எழுதி அவளை வரவழைப்பது நலமென்று பலர் யோசனை கூறிய போதும் அவர் தடுத்துவிட்டார். மேலும் சுந்தரம் பிரபு அப்போதைக் கப்போது ஹேமவதியின் கடிதங்களையெல்லாம் கிழித்துவிட்டாராதலால் அவள் எங்கு இருக்கிறாள் என்பதும் மற்றவர்களுக்குத் தெரியாது. கடிதங்கள் வேறு எவர் கையிலும் அகப்பட்டுவிடக் கூடாதென்னும் எண்ணத்துடன் அவர் அவற்றை அப்போதைக்கப்போது கிழித்து வந்தார். தன் குமாரி எங்கு வசிக்கிறாள் என்பதைப்பற்றிய சிறிய உளவு கண்டு பிடிக்கவும் கோவிந்தானந்தரால் முடியவில்லை.

இதற்கிடையில் இரத்தினபுரியில் இராஜசேகரன் என்ன செய்கிறான் என்பதைக் கவனிப்போம். ராட்சஸ குப்பனைப்

பார்த்துப் பேசிவிட்டு அங்கிருந்து நேராக ஒரு வாசகசாலைக்குச் சென்று பத்திரிகைகளில் கிருஷ்ணகிரியில் குழந்தை பறிபோனதன் சம்பந்தமாய் ஏதேனும் வெளியாயிருக்கிறதா என்று மிக ஆவலுடன் அப்பத்திரிகைகளைப் பிரித்துப் பார்த்தான். 'கிருஷ்ணகிரி ஜமீன்தாரின் ஒரே ஆண் குழந்தையை யாரோ கொன்றுவிட்டு அதன் பிரேதத்தைமட்டும் பகிரங்க ரஸ்தாவில் போட்டுவிட்டிருந்தனர்' என்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்குமென ராஜசேகரன் எண்ணினன். ஆனல் எவ்வளவு புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும், 'சுந்தரம் பிரபுவின் குழந்தையை அதன் தாதியினிடமிருந்து யாரோ அடித்துக்கொண்டு போய்விட்டார்கள்' என்பதற்குமேல் அதிகமாக ஒன்றும் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. மூன்று வாரங்களுக்குப் பிறகு அவன் பத்திரிகையைப் பார்த்தபோது, 'சுந்தரம் பிரபுவின் குடும்பத்துக்கு ஏற்பட்ட துக்கத்தைப்பற்றி விவரமொன்றும் தெரியவில்லை. பிரபுமட்டும் மாளிகையிலேயே தங்கியிருக்கிறரென்றாலும் அவரது மனைவி தன் துக்கத்தை மறப்பதற்காக வேறு பந்துக்கள் வீட்டுக்குப்போய்த் தங்கி இருப்பதாகத் தெரிகிறது' என்று பிரசுரிக்கப்பட்டிருந்ததைக்கண்டான். இதைக் கண்டு அவன் கவலையும் ஆச்சர்யமும் அடைந்தான். குழந்தையின் பிரேதம் ஏன் அவர்களுக்கு அகப்படவில்லையென்பதே அவனுக்குப் பெருத்த விசாரத்தைக்கொடுத்தது. ஆகவே அவன் மறுபடியும் காலிகள் வசிக்கும் குடிசைப் பிரதேசம் சென்று ராட்சஸ குப்பனைக்கண்டு மீண்டும் தகவல் விசாரித்தான். ராஜசேகரன் தன்மீது சந்தேகப்படுவதற்காக அவன் முதலில் பிரமாதமாகக் கோபித்துக்கொண்டான். இரண்டொரு பவுன்களை அவன்கையில் வைத்ததும் அவன், தான் முதலில் விவரமாகத் தெரிவித்ததே உண்மையென்று

உறுதி கூறினன். மேலும் ராட்சஸ குப்பன் கூறியதாவது:— "குழந்தை களவு போயிற்று என்று கிருஷ்ணகிரி பத்திரிகையில் இருக்கிறதல்லவா? அதன்படி அக் குழந்தையைக் களவாடியவன் நானே என்பதில் சந்தேகமில்லை. அதன்மீதிருந்த அடையாளங்களோடு கூடிய சொக்காய் முதலியவற்றையும் நான் உனக்குக் காண்பித்தேனே. இன்னும் சந்தேகமா? குழந்தையின் பிரேதம் அகப்படாததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். நான் யாருடைய வீட்டின் முன்புறத்தில் போட்டேனோ அவர்கள் அதை வெளிப்படுத்த பயந்து இரகசியமாகப் புதைத்துவிட்டிருக்கலாம்; அல்லது அக்குழந்தையே, சுந்தரம் பிரபுவின் பறிபோன குழந்தையென்று அவர்கள் அறியாமலிருந்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும் நான் உன் கட்டளையின்படி அக்குழந்தையின் பிரேதத்தைப் பலரும் அறியும்படி ஒரு பகிரங்க ரஸ்தாவில்விட்டு வந்ததால் பின்னர் அது என்னவாயிற்று என்பதுபற்றிய கவலை எனக்கில்லை. அதற்கு நான் ஜவாப்தாரியுமல்ல."

ராட்சஸ குப்பன்கூறிய மேற்படி சமாதானம் பொருத்தமாக இருந்தபடியால் ராஜசேகரன் மேற்கொண்டு ஒன்றும் பேசமுடியாமல் அவன் சொன்னதையே ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. மேலும் குழந்தையின் பிரேதம் அகப்படாவிட்டாலும் குழந்தை இறந்துவிட்டதென்பது நிச்சயமாய்விட்டதால் இனி சுந்தரம் பிரபுவின் ஆஸ்திக்குத்தானே வாரிசுதாரன் என்று நிச்சயித்துக்கொண்டு ஒருவாறு திருப்தியடைந்து பிரபுவின் மரண காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஹேமவதி இரகசியமாகவும் வேறு வேஷத்துடனும் இரத்தினபுரிக்கே வந்து குழந்தையைக் கண்டு பிடிப்பதில் முனைந்திருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியவே தெரியாது. அவ்வாறு நடக்குமெனவும் அவன்

யூகிக்கவில்லை. ஆகவே தன் எண்ணங்கள் கைகூடாமற் போகலாம் என்று அவன் கனவிலும் கருதவில்லை. இவ்வாறாகக் குழந்தை காணமற்போன நாளிலிருந்து ஒரு மாதம் கழிந்துவிட்டது. ராஜசேகரன் தினசரி கிருஷ்ணகிரி பத்திரிகையின் ஓரிடத்தில், 'கிருஷ்ணகிரி ஜமீன்தார் சுந்தரம் பிரபு அதிக காயலாவாய்ப் படுத்த படுக்கையுடன் இருக்கிறார். அவர் இனி அதிகநாள் பிழைத்திருப்பது அரிது' என்று காணப்பட்டது.

இச் செய்தியைக்கண்டு ராஜசேகரன் அதிக திருப்தியடைந்து உடனே ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு கிருஷ்ணகிரி ஜமீனுக்குப் புறப்பட்டான். சுந்தரம் பிரபுவின் வாரிசுதாரன் அவனே என்று அவன் கருதியிருந்தபடியால் அவர் மரணப் படுக்கையில் இருக்கிறார் என்று தெரிந்தமாத்திரத்தில் அவன் அவர் இருக்குமிடம் செல்லப் புறப்பட்டதில் ஆச்சரியமோ நியாய விரோதமோ ஒன்றும் இருப்பதற்குக் காரணமில்லை. அவன் வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது பலவித எண்ணங்களையெல்லாம் நினைத்துத் தன் முயற்சி வெற்றிபெற்றதற்காக அளவிலா உவப்படைந்தான். தாம் நினைத்த காரியத்தைச் சாதித்துக்கொள்கிறவர்கள் எப்போதும் சந்தோஷத்தையே அடைவார்கள். அக்காரியம் நியாயமானதா? அதைச் சாதித்துக்கொள்ளத் தாங்கள் கைக்கொண்டமுறை நீதியானதா? என்னும் கவலை அவர்களுக்கில்லை. நியாயமோ, தவறோ தாம் எண்ணிய காரியத்தை எண்ணியபடி முடித்துக் கொள்பவர்கள் சந்தோஷமடைவது சகஜமாயிருக்கிறது. நல்ல காரியத்தை நல்வழியில் முடித்துக் கொண்டவர்கள்மட்டும் சந்தோஷமடைந்து தீயகாரியத்தில் இறங்கியவர்கள் வெற்றியடைந்தாலும் அதற்காக வருந்துவதுதான்

நியாயமாகும். ஆயினும் எல்லாரும் அப்படி இருந்துவிட்டால் உலகத்தில் தீவினேயே இல்லாமற் போய்விடுமல்லவா? ஆகவே நமது ராஜசேகரனும் தான் தீயகாரியத்தில் வெற்றி பெற்றதாக நினைத்ததற்காகச் சந்தோஷப்பட்டான். இன்னும் சொற்ப தினங்களுக்குள் தன்னை அந்த ஜமீனிலுள்ள எல்லாரும் 'என்னுடைய பிரபுவே' என்று கூப்பிடுவார்கள் என நினைத்து மகிழ்ந்தான். இன்னும் சொற்பநேரத்துக்குள் சுந்தரம் பிரபு இறந்து விடுவாராதலால் தான் அம்மாளிகையின்மீது நின்று எவ்வளவுதூரம் சுற்றிப்பார்த்தாலும் அங்கெல்லாம் காணப்படும் விஸ்தீரமான நிலப்பரப்பு தன்னுடையதே யாகும் என்று கருதி அளவிலா மகிழ்ச்சியடைந்தான். இவ்வாறு சிந்தித்துக்கொண்டே ராஜசேகரன் வண்டியில் பிரயாணம் செய்துகொண் டிருக்கிறான். வண்டியை அதிவேகமாகச் செலுத்தும்படி சொன்னான். சுந்தரவிலாச மாளிகைக்குப் போய் சேருவதற்குள் அவன் பலவித எண்ணங்களை யெல்லாம் எண்ணித் தான் அடையப்போகும் உயர்நிலையைப்பற்றி உற்சாகமடைந்தான்.

வண்டி மாளிகை சென்று சேர்வதற்குள் அவனுக்கு அவசரம். இறக்கை இருந்தால் பறந்துவிடலாமா என்றும் நினைத்தான். அவனுடைய ஆத்திரமே அவனுக்கு காங்கையைப்போல் உஷ்ணத்தை உண்டாக்கிவிட்டது, இதற்குள் வண்டியும் மாளிகையின் முன்வந்து நின்றது. வண்டியை விட்டிறங்கிப் பார்த்தான். அம்மாளிகையில் ஜனங்கள் இருந்த நிலைமையைக்கண்டு பிரபு இறந்துவிட்டார் என்று நிச்சயப்படுத்திவிட்டான். காலஞ்சென்ற பிரபுவின் சேவகர்கள், தங்கள் எஜமானனுடைய தம்பியின் புத்திரன் வருகிறனே என்று நினைத்து அவனை வரவேற்க வந்தார்கள். ஆனல் அவர்கள் அதிக மரியாதையோ, பரபரப்போ காட்

டாமலிருந்தார்கள். இராஜசேகரன்தான் தங்களுக்குப் பிற்காலத்தில் எஜமானுக வரப்போகிருன் என்று நிச்சயமாக நம்ப அவர்களால் முடியவில்லை. மேலும் அவர்கள் கிராமவாசிகளாதலால் அவ்வளவாக மரியாதை காட்டவும் அவர்களுக்குத் தெரியவில்லை. ஹேமவதி இரத்தினபுரியில் என்ன செய்துகொண்டிருக்கிருள். காணுமற்போன குழந்தையைப் பற்றிய தகவல் எவ்வளவுதூரம் கிடைத்திருக்கிறது என்பது போன்ற விவரமொன்றும் அச் சேவகர்களுக்குத் தெரியாதாகையால் பிற்காலத்தில் தங்கள் எஜமான் யாரா யிருக்கக் கூடும் என்பதில் எவ்வித முடிவுக்கும் வர அவர்களால் முடியவில்லை.

ராஜசேகரன் அந்த ஆட்களை, பிரபுவின் நிலைமையைப் பற்றி விசாரித்தான். பிரபு இறந்துபோய் ஒருமணி நேரமாயிற்று என்பதைத் தெரிந்துகொண்டான். உடனே அவன் மிக்க துக்க மடைந்தவன்போல் பாவனை காட்டிக்கொண்டு இறந்தவர் கிடக்கும் அறைக்குத் தன்னை அழைத்துச் செல்லும்படி ஒரு சேவகனைக்கேட்டான். சொற்ப நேரத்துக்குள் ராஜசேகரன் தன் பெரிய தந்தை இறந்து கிடக்கும் படுக்கை யின்முன் நின்றுன். அப்போது அங்கிருந்த கோவிந்தானந்தரும், குடும்ப டாக்டரும் மரியாதைக்காகச் சிறிதுதூரம் விலகினர். அவன்தான் பிரபுவின் வாரிசுதாரன் என்பதற்காக அவர்கள் அவ்வாறு விலகவில்லை. அவன் வாரிசுதாரனே, இல்லையோ; அவனே நெருங்கிய பந்துவாதலின் மரியாதை காட்டினர். மேலும் ராஜசேகரன் ஒருகால் மனந்திரும்பி நல்வழிக்கு வந்திருக்கலாமென்றும், இப்போது பிரபு இறந்துவிட்டதால் அவன் உண்மையிலேயே அதிக துக்கமடைந்து முறையிடப் போகிருனென்றும், அதைத் தான் ஏன் பார்க்க வேண்டுமென்றும் கோவிந்தானந்தர் நினைத்தார். ஆனுல்

ஒழுக்கக்கேட்டிற் சிறந்த பரம அயோக்கியனுகிய ராஜசேகர னுடைய உள்ளத்தில் அப்போது எத்தகைய உணர்ச்சி அதிக மாக நிரம்பி யிருந்தது என்பதைக் கள்ளங் கபடமற்ற கோவிந்தானந்தர் அறியவில்லை, பாவம்!

டாக்டரும், கோவிந்தானந்தரும் அவ்வறையைவிட்டுச் சென்றுர்களே யொழிய ஒரு தாதிமட்டும் அங்கேயே இருந் தாள். அவள் அங்கிருக்கிறுளென்று தெரிந்துகொண்ட அவன் நீண்டநேரம்வரை, ஒரேமாதிரி துக்கத்துடன் இருப் பதைப்போல் பாவனைகாட்டினுன். இறந்துகிடக்கும் தன் பெரிய தந்தையின் முகத்தை நோக்கினுன். ஆயினுமென்ன? அவருடைய மரணத்துக்கு அவனுடைய குணமும் நடத்தை யும் சூழ்ச்சியுமே காரணமென்பதை உணர்ந்து உண்மையில் வருத்தப்பட்டானு? இல்லவே இல்லை. அந்த எண்ணமே உண்டாகவில்லை. எமனுக்கு இரையாகி உயிரற்றுக் கிடக் கும் அப்பிரேதத்தின் முகத்தைப் பார்த்தபோதும் அவனது மனம் இரங்காமல் அல்லது உண்மையில் துக்கப்படாமல், சுந்தர விலாச மாளிகையையும், அதைச் சுற்றிலுமுள்ள ஜமீ னையும் மனக் கண்ணுல் பார்த்து அவற்றிற்கு எஜமானனுகி விட்டோமே என்னும் சந்தோஷத்தைத் தான் அடைந் தான். ஆனுல் வெளிப்பார்வைக்குமட்டும் பிரபு இறந்துவிட் டதற்காக அதிக துக்கப்படுபவன்போல் பாவனை காட்டி னுன். ஆ! என்னே திருட்டு உள்ளம்! இப்படிப்பட்டவர் கள் எப்படிப்பட்ட தீயகாரியத்தையும் செய்வர் என்பதில் சந்தேகமென்ன இருக்கிறது. இதனுல்தான் நமது பெரி யோர்கள், 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உத்தமர்கள் தம் உறவு கலவாமை வேண்டும்' என்று இறை வனை நோக்கிப் பாடினுர்கள் போலும்!

அவன் அந்த நிலைமையில் இருக்கும்போது அதிவேக

மாக ஒருவண்டி அம்மாளிகையை நோக்கி வந்துகொண்டிருந்தது. அவன் வண்டிவரும் சத்தம்கூடக் கேட்காதவன் போல் இருந்தான். ஆனால் வண்டிவரும் சத்தத்தைக் கேட்ட தாதிமட்டும் மெதுவாக ஜன்னலருகில் சென்று அங்கிருந்த திரையைத் தூக்கிப்பார்த்தாள். உடனே அவள் ராஜசேகரனிடம் 'எங்களுடைய எஜமானியின் வண்டிதான் வந்து நின்றிருக்கிறது' என்று மெதுவாகச் சொன்னாள். இதைக்கேட்டதும் திடீரென்று மயக்கம் தெளிந்தவனைப் போல் 'ஆ' என்றான். தான் சுகசௌகரியங்களை யடைவதற்குத் தடையா யிருந்தவர்களில் ஹேமவதியும் ஒருத்தி என்று கருதி அவன் அவளிடம் வெறுப்பும் துவேஷமும் பெற்றிருந்ததால் அவ் வெறுப்பைத் தீர்த்துக் கொள்வதற்குரிய காலமும் சௌகரியமும் தனக்கு வாய்த்துவிட்டது என்று மனதில் அகம்பாவத்துடன் நினைத்ததேபோல் அவன் முகக் குறியினின்றும் தெரிந்தது. அவனும் ஜன்னல் அருகில் சென்று வெளிப்பக்கம் பார்த்தான். வண்டி சமீபத்தில் நின்றிருந்த தென்றாலும் உள்ளே இருந்தவர்களைக் காண அவனால் முடியவில்லை. ஆகவே அவன் மீண்டும் மரணப் படுக்கையின் அருகில் நின்றுகொண்டு ஹேமவதியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஏனெனின் அவள் நேராகத் தன் இறந்துபோன கணவன் கிடக்கும் அறைக்கே வருவாள் என நினைத்தான்.

அவன் அவ்வாறு நினைத்தது தவறல்ல. இரண்டொரு நிமிஷங்களுக்குள் அறையின் கதவு மெதுவாகத் திறக்கப் பட்டது. ஹேமவதிச் சீமாட்டியும் உள்ளே நுழைந்தாள். உடனே அவள் தன்மீது இருந்த போர்வை முதலியவற்றையெல்லாம் எடுத்துப் போட்டுவிட்டு மிக்க எளிய உடையுடன் நின்றாள். அவளும் அன்று காலை இரத்தினபுரியில் பத்திரி

கையின்மூலம் பிரபு இறக்குந் தருணத்தில் இருக்கிறார் என் பதை அறிந்துகொண்டு மிக அவசரமாகப் புறப்பட்டுவந்தாள். இப்போது இறந்துபோனவர் கிடக்கும் அறையில், இறந்து போனவரின் பிரேதத்தின் முன்னிலையில் பரஸ்பர விரோதங் கொண்டவர்களான ஹேமவதி சீமாட்டியும், ராஜசேகரனும் ஒருவரை யொருவர் நேரில் சந்தித்தனர். இருவரும் ஒரு வரை யொருவர் வெறுப்புடனும் துவேஷத்துடனுமே பார்த் தனர். மறுநிமிஷமே அவள் தன் கணவர் இறந்து கிடக்கும் படுக்கையின் பக்கத்தில் மண்டியிட்டுத் தலைகுனிந்து பல நிமிஷங்கள்வரை கண் மூடிக்கொண்டு துக்கத்துடன் இருந் தாள். அப்போது அறையில் நிசப்தமே குடிகொண்டிருந் தது. அந்த நிசப்தத்தைக் கெடுக்க ராஜசேகரனுக்கும் தைரியமிருக்கவில்லை. ஹேமவதி தன் கணவன் இறந்துவிட் டார் என்பதற்காக ஓவென்று கதறி அழவில்லை. வீண் ஆர்ப்பாட்டங்கள் எதுவும் செய்யவில்லை. ஆனால் மனமார வருந்தினாள். அவளுடைய மனம் அப்படியே புண்பட்டு உருகிய தென்பதில் சிறிதும் ஆட்சேபமில்லை. அப் பிரபு அவளிடம் அதிக அன்பும் அனுதாபமு முடையவராயும், நல்ல அந்தஸ்தையும் சுகசௌகரியங்களையும் அளித்தவராயும் இருந்து அவர் இறந்துவிட்டதால் அவள் மனம் வருத்தப் பட்டிருக்கு மென்பதில் என்ன சந்தேக மிருக்கக்கூடும்? அவள் தலைகுனிந்தவண்ணம் மௌனமாக வடித்த கண்ணீர் முத்துபோல் துளித்துளியாக அப்பிரேதத்தின் கையின்மீது விழுந்திருந்தது. பிறகு அவள் நின்றுகொண்டு அப்பிரபுவின் அங்கங்களையெல்லாம் பாதாதிகேசம் ஈறாக எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக உற்று நோக்கினாள். அப்போதும் அவள் மௌனமாகவே இருந்ததால் அவள் மனம் எவ்வளவுதூரம் உண்மையில் உருகுகிறது என்பது அவளுடைய முகக்குறிபி

யின்றுமே நன்கு வெளிப்பட்டது. பிறகு அவள் குனிந்து இறந்துபோனவரின் நெற்றியின்மீது ஒரு முத்தமிட்டாள். பின்னர் திரும்பிப் பார்த்தபோது ராஜசேகரன் எதிரில் நிற்பது அவள் நினைவுக்குவந்தது, அவள் இடையில் சில நிமிஷங்கள்வரை உண்மையிலேயே அவன் அங்கு இருப்பதையே மறந்திருந்தாள்.

அப்போது ராஜசேகரன் சற்று துணிந்து, 'ஓ! மாதரசியே! நான் உன்னைப்பார்த்து ஐந்து வருஷங்களாகின்றன. அப்போது பார்த்தசமயம் கோவிந்தானந்தரின் புதல்வியாகிய நீ, மற்றொருமுறை நாம் இருவரும் சந்திப்பதற்குள் கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாய் விடுவாய் என்று நினைத்ததே யில்லை. ஆனால் நான்மட்டும் இப்போது ஆனதைப்போல் கிருஷ்ணகிரி ஜமீன்தார் ஆகலாமென்று நினைத்ததுண்டு அல்லவா?' என்று மமதையுடன் கூறினன்.

அதற்கவள், 'இல்லை ஐயா, இப்போதும் நீர் சாதாரண ராஜசேகரன்தான்' என்று உறுதியுடன் பதிலளித்தாள். அதற்கு அவன் பீதியுடனும் ஆத்திரத்துடனும் 'அதெப்படி' என்றுகேட்டான். அப்போது ஹேமவதி, "ஐயா, நான் என் அருமைக் குழந்தையைக் கண்டுபிடித்துவிட்டேன். அக்குழந்தையும் இப்போது இந்தக் கட்டடத்திலேயே இருக்கிறது. ஆதலால்தான் நீர் சாதாரண ராஜசேகரனே என்று சொன்னேன்" என்று கூறிக்கொண்டே அவ்வறையைவிட்டுத் திடீரென்று வெளியே சென்றாள்.

ராஜசேகரனும் அவளைப் பின்தொடர்ந்து சென்றான். கொஞ்சநேரத்துக்குள் அவன் மனம் பலவிதமாகக் கஷ்டப்பட்டது. அந்தரங்கத்தில் சந்தோஷப் பட்டுக்கொண்டிருந்த அவன் மகா துக்கத்தை யடையலானான். அவனது மூளையே குழம்பிவிட்டது. ராட்சஸ குப்பன் தன்னை ஏமாற்றிவிட்

டானே என்று நினைத்தான். அல்லது ஹேமவதிச் சிமாட்டியே பொய் கூறுகிறுளோ என்றும் சந்தேகித்தான். குழந்தை ராட்சஸ குப்பனுல் கொல்லப்படவில்லையா? அல்லது வேறு ஏதேனுமொரு குழந்தையைக் கொண்டுவந்துவைத்து ஹேமவதிச் சிமாட்டி தன்னை ஏமாற்றப் பார்க்கிறுளா என்னும் பல சந்தேகங்கள் அவனது உள்ளத்தில் தோன்றலாயின. ஆயினும் அவள் வேறு குழந்தையைக்காட்டித் தன்னை ஏமாற்ற முடியாது என்றும் நினைத்தான். ஏனெனின் தோளின்மீது தினகரனுக்கு சூரிய வடிவம்போன்ற மச்சம் இருக்கவேண்டுமென்பது அவனுக்குத் தெரியுமல்லவா? அம்மச்சம் இல்லாத குழந்தையை அவன் எப்படி ஒப்புக்கொள்ளக்கூடும்.

அவள் வேறு ஒரு அறைக்குப் போய்க்கொண்டிருந்த போது அவன் அவளுக்கு முன்சென்று வழிமறித்து, 'குழந்தை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது என்று சொல்கிறுய் அல்லவா?' என்று ஏதோ பேச ஆரம்பித்தானென்றுலும் பயத்தாலும் அதிக துக்கத்தாலும் மேலே பேச முடியாமல் அவஸ்தைப்படலானுன். அப்போது அவள்மட்டும் தைரியத்துடன், 'ஆம்; நான் அப்படித்தான் சொன்னேன்' என்று கூறினுள். அச்சமயத்திலும் ராஜசேகரன் பேசமுடியாத நிலைமையில் மெதுவாகச் சமாளித்துக்கொண்டு தட்டுத் தடுமாறி, 'நாம் எதையும் பார்த்துவிடுவோம்' என்று கூறினுன்.

அவன் அவ்வாறு கூறியதைக்கேட்ட ஹேமவதி அதிக ஆத்திரமடைந்து அவனை உற்றுப்பார்த்து, 'ஐயா! நான் சொல்வதில் உனக்குச் சந்தேகங்கூட இருக்கிறதா?' என்று கேட்டாள். அப்போது அவன், அவள் ஏதோ சில உண்மைகளை நிச்சயமாகக் கண்டுபிடித்திருப்பதால்தான் இவ்வ

ளவு தைரியமாகப் பேசுகிறாள் என்று தெரிந்துகொண்டு திக்பிரமையடைந்து உயிரற்ற பிணம்போல் நின்றான். மீண்டும் பழைய நிலைமையையே அடைந்து விடவேண்டிய கதி ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சவும் அவனது முகம்வெளுத்துப் போய்விட்டது. ஹேமவதியும் சற்றுநேரம் அவனை உற்றுப்பார்த்துக்கொண் டிருந்துவிட்டுப் பிறகு தான் முன் செல்ல நினைத்த அறைக்கே செல்லலானாள். அப்போதும் அவனைவிடாமல், அவள் என்னசெய்யப்போகிறாள் என்பதைத் தெரிந்துகொண்டு விட வேண்டுமென்னும் ஆவலுடன் அவளைப் பின்தொடர்ந்து சென்றான்.

மற்றொரு அறையில் நுழைந்ததும் ஹேமவதியின் அந்தரங்க வேலைக்காரியான மந்தரையின் கையில் அழகான குழந்தையொன்று இருக்கவும், ஹேமவதியின் தந்தையாரான கோவிந்தானந்தர் குனிந்த வண்ணம் அக் குழந்தையை முத்தமிட்டுக்கொண் டிருப்பதையும் கண்டான். அவர்களருகில் குடும்ப வைத்தியரும் நின்றுகொண்டிருந்தார். ஹேமவதி சீமாட்டி தன் வேலைக்காரியினிடமிருந்து அக் குழந்தையை வாங்கிக்கொண்டு அதைத் தன் மார்புடன் ஆர்வமாக அணைத்துக்கொண்டு உச்சிமோந்து முத்தமிட்டாள். அவள் அவ்வாறு செய்ததிலிருந்து அக் குழந்தையை இனி இந்த உலகிலுள்ள எந்த சக்தியும் தன்னிடமிருந்து பிரிக்கமுடியாது என்று உறுதியுடன் சொல்வதுபோலக் காணப்பட்டது. அதையெல்லாம் பார்த்தபோது ராஜசேகரனுடைய மனம் எவ்வாறு நொந்துபோ யிருக்கும் என்பது பற்றி வாசகர்கள் அறிந்துகொள்வது எளிது. அப்படியிருந்தும் அவன் தன் உணர்ச்சிகளை யெல்லாம் அடக்கிக்கொண்டு அக் கூட்டத்தாரோடு கலந்துகொண்டு, 'ஓ, அப்படியானால்

இக்குழந்தைதான் காணுமற்போன என் சகோதரன் போலும்!' என்று கேட்டான்.

அப்போது அங்கேயிருந்த அக்குழந்தையின் பாட்டனான கோவிந்தானந்தர், 'அக் குழந்தையை மீண்டும் நம்மிடம் ஒப்படைத்ததற்காக எல்லாம் வல்ல இறைவனை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஐயோ! அருமையான குழந்தை, முன்பு இருந்ததைவிடச் சிறிது இளைத்துப் போயிற்று. சிறிது இளைத்துப்போயிற்றென்றாலும் மற்ற அழகுகளெல்லாம் எவ்வகையிலும் குறையவில்லை. முன்பு நாங்கள் சிறிது அஜாக்கிரதையாக வைத்துக்கொண்டிருந்ததால்தான் யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். இனி அவ்வாறு அஜாக்கிரதையுடன் ஒருகாலும் இருக்க மாட்டோம்.' என்று முகமலர்ச்சியுடன் கூறினர். அப்பெரியவர் இவ்வாறு கூறிக்கொண்டே ராஜசேகரனை உற்றுப் பார்த்தார். அதனல் ராஜசேகரனே இந்த சூழ்ச்சிக்குக் காரணமென்றாலும் குழந்தை தெய்வாதீனமாக அகப்பட்டுவிட்டபடியால் இனி அதற்காக அவனிடம் எத்தகைய துவேஷமும் பாராட்டப் போவதில்லை என்று கூறியமாதிரி இருந்தது.

அச்சமயத்தில் ராஜசேகரன், குடும்ப வைத்தியரைக் காண்பித்து '.அவர் எல்லாருக்கும் பொதுவாக இருந்து நியாயம் வழங்கட்டும். உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்' என்று சொல்லவும் ஹேமவதி சீமாட்டிக்கு அதிக கோபம் வந்துவிட்டதால் அதிகார தோரணையுடன், 'ஓ, உம்முடைய எண்ணம் எனக்குத் தெரியும் ஐயா; இந்தக் குழந்தைதான், காணுமற்போன என்னுடைய குழந்தை என்பதை ருஜூப்பிக்கவேண்டுமென்று நீர் விரும்புவதாகத் தெரிகிறது.

எப்போதுமே கெட்ட செயல்களில் ஈடுபட்டிருப்பவர்கள் தான் பிறர்மீதும் அத்தகைய பழியைச் சுமத்துவது வழக்கமாக இருக்கிறது. ஆனால் ஒரு பெரியார் இறந்துபோய் அதற்காகத் துக்கம் கொண்டாட வந்திருக்கும் இவ்விடத்தில் உம்முடன் சண்டைபோட நான் தயாராக இல்லை. இப்போது நீர் கூறியதுபோல ருஜுக்களைக் கேட்பது உம் போன்றவர்களின் இயற்கை என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன்,' என்று கூறினாள்.

அதுவே சமயமெனக்கொண்ட ராஜசேகரன், 'ஓ, அப்படியானால் நான் கேட்டபடி ருஜுப்பித்துக்காட்ட நீ தயாராயிருக்கிறாய் என்று தெரிகிறதல்லவா? மேலும் நீ எப்போதுமே பிறரிடம் சந்தேகங்கொள்ளாமலும் பெருந்தன்மையுடனும் நடந்து கொள்பவளாதலால் இக்குழந்தையை உன்னிடம் கொடுத்தவர்களும் உன்னை ஏமாற்றிவிட் டிருக்கலாம். ஆகவே எதற்கும் உனக்குப் பிறந்த குழந்தைதானா இது என்று சோதித்துப் பார்த்துவிடுவது நலம்' என்று தெரிவித்துக்கொண்டான். அப்போது அவள் அதிக வருத்தத்துடன், 'ஐயா, இப்போது நாம் சந்தித்துப் பேசுவதை நீடித்திருக்கும்படிசெய்ய நான் விரும்பவில்லை. ஆகவே இதை முடித்துவிட விரும்புகின்றேன். இயற்கைத்தேவி போதுமான அளவு ருஜுப்பிப்பதற்கான அறிகுறிகளைக் கொடுத்திருக்கின்றாள். இதோ நிற்கிறாரே இந்த வைத்தியர்தான் அக்குழந்தை பிறக்கும்போதும் சமீபத்தில் இருந்தார். ஆகவே அவர் இப்போது என் கரத்திலிருக்கும் குழந்தையும், அப்போது நான் பிரசவித்த குழந்தையும் ஒன்றுதானா என்று சொல்லிவிடுவார் என்றே நம்புகிறேன்' என்று கூறிக் கொண்டே கீழே உட்கார்ந்து அக்குழந்தையைத் தன் மடிமீது படுக்கவைத்துக்கொண்டு அதன் உடைகளையெல்லாம்

கழற்ற ஆரம்பித்தாள். ராஜசேகரன் அதை மிகவும் கவலையுடன் கவனித்து வந்தான். குழந்தை தினகரனுடைய தோளில் மச்சமிருக்கிறதா என்றுமட்டும் கவனிக்காமல் அவள் முகத்தில் எத்தகைய குறிகள் காணப்படுகிறதென்றும் கவனித்துவந்தான். ஆனால் ஹேமவதியோ மிக்க மனோ உறுதியுடன் சிறிதும் பரபரப்போ ஆத்திரமோ அடையாமல் தெளிவான முகக் குறியுடனும், சிறிதும் அச்சத்தாலோ, மற்றெக்காரணத்தாலோ நடுக்குறுமலும் அக்குழந்தையின் உடைகளைக் கழற்றினாள். அவ்வாறு கழற்றுவதற்கு இரண்டொரு நிமிஷங்களே ஆயிற்றென்றாலும் ராஜசேகரனுக்கு அச்சமயம் பல மணிகள் கழிவதுபோல் தோன்றியது. எப்படியாயினும் உடைகள் கழற்றப்பட்டதும் குழந்தையின் தோளின்மீது சூரிய உருவம்போன்ற மச்சம் பிரகாசமாகக் காணப்பட்டது.

இராஜசேகரன் திக்பிரமை யடைந்தான். அவனால் அப்படியும் இப்படியும் அசைய முடியவில்லை. வாய்திறந்து ஒருவார்த்தையும் பேசமுடியவில்லை. ஏன்? மூச்சுகூட விடவில்லை யென்று சொல்லலாம். சலவைக்கல் சிலைபோல் பற்பல எண்ணங்களை சிந்தித்துக்கொண்டே நின்றான். அதே சமயத்தில் டாக்டரும், தன் உத்தியோகத்தின் வழக்கப்படி மெதுவாகக் குனிந்து மச்சத்தைப் பரிசோதனை செய்தார். அவர் அவ் விஷயத்தில் தன்னைத் திருப்தி செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனெனின் அக்குழந்தையே ஹேமவதிக்குப் பிறந்த தினகரன் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். ஆயினும் அங்குள்ள மற்றவர்களுக்குத் திருப்தி செய்யும்பொருட்டே அவ்வாறு பரிசீலனை செய்தார். அவ்வாறு பரிசீலனை செய்ததன் முடிவாக அவர், 'ஆம்; சந்தேகமில்லாமல் இக்குழந்தை சுந்தரம் பிரபுவின் குமாரனு-ன

தினகரம் பிரபுவே என்று சத்தியம் செய்வேன்' என்று கூறினார்.

அப்போது ராஜசேகரன், 'அம்மையே! இனி நான் ஒன்றும் பேசுவதற்கில்லை' என்று மனமுடைந்தவனாயும், மூளை குழம்பியவனாயும் மெதுவான குரலில் சொல்லிவிட்டு அக்குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தான். ஹேமவதி மட்டும் தன் குழந்தைக்கு மீண்டும் அதன் உடைகளை அணிவிக்க ஆரம்பித்தாள். பிறகு ஹேமவதி அக்குழந்தையைத் தன் அந்தரங்க வேலைக்காரியாகிய மந்தரையினிடம் கொடுத்து விட்டுத் தன் இடத்தைவிட்டு எழுந்து, 'ஐயா! ராஜசேகரரே! உமது பெரிய தந்தையை அடக்கம் செய்யப் போகும் சமயத்தில் நீங்கள் இங்கிருக்க விரும்பினால் அதைப் பற்றி எனக்கு எத்தகைய ஆட்சேபமுமில்லை' என்று தெரிவித்தாள். அதற்கு அவன், அப்போதுதான் மயக்கத்திலிருந்து தெளிந்தவனேபோல் 'அம்மணி! ஒரே ஒரு வார்த்தையை உன்னிடம் தனிமையாகச் சொல்ல எனக்கு அனுமதி யளிப்பாயா?' என்று கேட்டான்.

அப்போது ஹேமவதி அக்கூட்டம் நின்று கொண்டிருந்த அதே அறையின் மற்றொரு ஓரத்தில் ஒரு ஜன்னலருகில் சென்று நின்று, 'இதைவிடத் தனியான இடத்திற்கு வர முடியாது. நாம் பேசப்போவது அவர்களுக்குக் கேட்காது. ஆகையால் இங்கேயே பேசும்' என்றாள். ராஜசேகரனும் அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

அங்கு போய் நின்றுகொண்டு ராஜசேகரன் திக்கற்றவனைப் போன்ற முறையில் அதிக மனக்கவலையுடன், 'அம்மையே! உன்னிடமிருந்து நான் எதையும் எதிர்பார்க்கக் கூடாது என்று நான் அறிந்திருக்கிறேன். ஆயினும் இவ்வுலகில் ஒரு பைசாவும் இல்லாமல் பரம ஏழையாய்த் திரியும்

படியான நிலைமையில் நீ என்னை விட்டுவிடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். என் பெரிய தந்தையாகப் பார்த்து உயிலில் ஏதேனும் எழுதி வைத்திருந்தா லொழிய ஒரு பைசாவும் அவருடைய சொத்திலிருந்து எதிர்பார்க்க எனக்கு உரிமை இல்லை யல்லவா?' என்று கெஞ்சிக் கேட்டான். அதற்கு அவள், இயற்கையாகவே பெண்களுக்கிருக்கக் கூடிய இரக்க சுபாவத்துடன், 'ஐயா, அப்பெரியார் உமது பேருக்கு ஒன்றும் எழுதவில்லை என்பது நிச்சயம். ஆயினும் உம்முடைய கொடுமையால் நான் பலவித கஷ்டங்களுக்கு ஆளாகி யிருக்கிறே னென்றாலும் உம்மிடம் அதிக கண்டிப்புடன் நடந்துகொண்டு உம்மை ஹிம்சை செய்ய நான் விரும்பவில்லை' என்று அனுதாபத்துடன் பதிலளித்தாள்.

அப்போது அவள் அவனைப் பார்த்த பார்வையால் அவள் தன்னிடம் அதிக துவேஷங் கொள்ளவில்லை யென்பதை உணர்ந்து, 'அம்மணியே? நீ இவ்வாறு அனுதாபங் காட்டி நான் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் அடையும்படி செய்ததற்காக மிகவும் சந்தோஷப் படுவதுடன் உனக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் இங்கிருப்பது உனக்கு வெறுப்பாக இருந்தால், எனக்குக் கொடுப்பதாகச் சொன்னதைக் கொடுத்து விடுவாயாயின் இப்போதே போய் விடுகிறேன். ஆனால் பணமில்லாமல் வெளியே போக என்னால் முடியாது. ஏனெனின் இப்போது உன் எதிரில் நிற்கும் நான் பிச்சைக்காரனைப்போல் பரம ஏழையாக இருக்கிறேன்? என்று மீண்டும் கெஞ்சுந் தோரணையில் கேட்டுக்கொண்டான்.

அவன் அவ்வாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டதைக் கண்ட அவள் சிறிது நேரம் தன் மனதிலேயே பலவிதமான சிந்தனைகளைச் செய்தாள். பிறகு அவள் அதிக பரபரப்புடன்,

‘ராஜசேகரரே! நாம் இருவரும் சிறு பிராயத்தில் அதாவது சிறுவனும் சிறுமியுமாக இருந்தபோது சிநேகிதர்களாக இருந்தோம். இதே மாளிகையைச் சுற்றிலுமுள்ள தோட்டங்களில் அப்போது நாம் இருவரும் விளையாடி இருக்கிறோம். ஆகவே நீர் இப்பால் எனக்கு இழைத்துள்ள கொடுமைகளைக் கவனிக்கும்போது என்னுடைய அனுதாபத்தைப் பெறுவதற்கும் நீர் அருகரல்ல என்பது அங்கிங்கெனாதபடி எங்கும் நிரம்பியுள்ள இறைவனுக்குத் தெரியுமென்றாலும் உம்மிடம் அவ்வளவு கடுமையாக நடந்துகொள்ள நான் விரும்பவில்லை. ஆயினும் நீர் இங்கிருக்க முடியாது. நாளையதினம் புறப்பட்டுவிட வேண்டியதுதான். ஆனால் அதற்குள் நான் உம்மிடம் பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்காக என்னைப்பற்றி வேறுவிதமாக நினைத்துக்கொண்டு விடவேண்டாம். உம்முடைய நன்மைக்காகத்தான் சில விஷயங்களைச் சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் இப்போதே அதிகநேரம் பேசிக்கொண்டிருந்தால் நாம் ஏதேனும் வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுவதாக மற்றவர்கள் நினைப்பார்களாதலால் இப்போது இத்துடன் நமது பேச்சை நிறுத்திக் கொள்வோம். என்னாலியன்றதை உமக்குச் செய்யத் தயாராயிருக்கிறேன். உமக்கெனப் பிரத்யேகப்படுத்தப்படும் அறையில் நீர் தங்கியிருங்கள். இன்றிரவு சுமார் பதினொரு மணிக்கு இக்கட்டடத்துக் கருகிலுள்ள மடத்தில் என்னைச் சந்திக்கவும். வழி உமக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். மடத்தின் கதவுகள் திறக்கப்பட்டிருக்கும்,’ என்று அவனிடம் கூறினாள்.

பிறகு அவள் அவனுக்குக் கண்ணியமான முறையிலேயே வந்தனம் செலுத்திவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றாள். ஆனால் ராஜசேகரன் மட்டும் அந்த இடத்தைவிட்டுச் சிறிது

186566

நேரம் வரை அசையவே இல்லை. ஹேமவதி மேற்கூறிய வாறு பேசியதைக் கேட்டு அவன் ஆச்சரியமும் ஆத்திரமும் அடைந்த படியால் எதையோ நினைத்துக்கொண்டு அப் படியே நின்று விட்டான். ஆனால் சொற்ப நேரத்திற்குள் அவனுடைய நினைவு அவனுக்கு வரவே அவனும் தான் நின் றிருந்த விடத்தை விட்டுச் சென்றான். ராஜசேகரன் தனக்கு அளவில்லாத தீமையைச் செய்திருக்கிறான் என்பதை அறிந் திருந்தும் ஹேமவதி அவன் விஷயத்தில் அவ்வளவு கடுமை யாக இல்லாமற் போனதன் காரணம் அவர்களுடைய பாலிய சினேகமே யாகும். குழந்தைப் பருவத்தில் சினேகிதமா யிருந்தவர்கள் யாரும் எப்போதும் எக்காரணத்தைக் கொண் டும் அந்த அன்பை இழக்க மாட்டார்கள்.

4-வது அத்தியாயம்

மடத்தின் மர்மம்

சுந்தரவிலாச மாளிகையில் வாயிலின் மீது இருந்த கோபுரத்தில் அமைக்கப்பட் டிருந்த கடிகாரம் 'டாங், டாங்' என்று பதினொருமணி அடித்தது. அப்போதுதான் ராஜசேகரனும் அம்மாளிகையில் தனக் கென விடப்பட்டிருந்த அறையினின்றும் புறப்பட்டு மெது வாகப் பல வாயில்களையும் கடந்து அம்மாளிகைக்கு அடுத் தாற்போலிருந்த மடத்துள் மெதுவாக நுழைந்துகொண் டிருந்தான். அவனது கையில் மினிக், மினிக் என்று உபாய மாக எரிகிற மெழுகுவர்த்தி விளக்கு இருந்தது. அதை அவன் மடத்தில் நுழைந்ததும் ஒரு மூலையில் வைத்துவிட்டு சுவற்றின்மீது சாய்ந்தவண்ணம் ஹேமவதியின் வருகையை

ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அந்த மடம் பயங்கரமான குகைபோல் இருட்டாய் இருந்தது. அதில் பலருடைய பிரேதங்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களும் இருந்தன. ஆனால் அதற்கெல்லாம் அவன் பயப்படவில்லை. ஏனெனின் அவன் நவீனகால அறிவுடையவனா யிருந்ததால் உபயோகமற்ற மூடக்கொள்கைகளில் அவன் நம்பிக்கையற்றவனாய் இருந்தான். மறுமையிலுள்ள ஆன்மாக்கள் அங்கு வந்து அவனை பயமுறுத்தும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. அவன் அவ்வாறு நின்றுகொண்டிருந்தபோது ஹேமவதியைப்பற்றி இருவிதமாக நினைத்துக்கொண் டிருந்தான். அவன், 'இந்த நடுராத்திரியில் இப்படிப்பட்ட ஏகாந்தமான இடத்தில் இரகசியமாக வந்திருக்கும்படி அவள் கூறியதன் காரணம் யாதாயிருக்கும்? இதில் ஏதோ மர்மமிருக்கிறது' என்று சிந்தித்து ஆச்சரியமடைந்துகொண் டிருந்தான். இத்துடன் அவன் நிற்கவில்லை. அவள் ஒருகால் தன்னை நேசிக்க ஆரம்பித்துவிட்டாளோ என்று சந்தேகித்தான். உண்மையிலேயே அவன் தக்க யௌவன பிராயமுடையவனாகவும், நல்ல தேகதிடமுடையவனாயும், ரூபலாவண்ய முடையவனாயும் இருந்ததால், யௌவனமான மாது தன்னை நேசிக்கிறாளோ என்று சந்தேகப்பட்டதில் நியாய விரோதம் ஒன்றுமில்லை. மேலும் ஹேமவதியைவிட நான்கு வருஷம் பெரியவனாக அதாவது இருபத்தைந்து வயதுடையவனாய் இருந்தான். இதை யெல்லாம் கவனிக்கும்போதும் அவன் அவ்வாறு சந்தேகப்படக் காரண மிருக்கிறதென்றே தெரிகிறது. அன்றியும் அவளே காலையில் பேசும்போது அவர்களுடைய சிறுபிராயத்தின் நட்பைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறாள் அல்லவா?

ராஜசேகரன் இவ்வாறெல்லாம் பலவிதமாகச் சிந்தித்துக்

கொண்டிருந்தபோது அம்மடத்தின் வாயில் பக்கமாகச் சிறு பிரகாசம் வந்துகொண் டிருப்பதைக் கண்டான். இரண் டொரு நிமிஷங்களுக்குள் ஹேமவதி சீமாட்டியும் தன் கையில் ஒரு சிறு மெழுகுவர்த்தி விளக்குடன் அங்கே வந்து அவனது முன்னிலையில் நின்றாள். ராஜசேகரன் அவளது முகத்தைக்கூர்ந்து நோக்கினான். முகம் வெளுத்திருந்தது. அவளது முகக் குறியிலிருந்து தான் நினைத்ததுபோல அப்ப டிப்பட்ட எண்ணமுடையவளா யிருக்கவில்லை யென்று தெரிந்தது. அவளும் உடனே மடத்தின் கதவைச் சாத்தி னாள். ஆனால் தாளிடவில்லை. பிறகு மெதுவாக ராஜசேக ரன் அருகில் சென்றாள். பிறகு அவனைப்பார்த்து, "ராஜ சேகரப் பிரபுவே! என்னுடைய நடத்தையைக்கண்டு நீர் ஆச்சரியப்படுவீர் என்றே நினைக்கிறேன். என் நடத்தையில் சந்தேகமும் கொள்ளலாம். நான் ஏதோ தவறான எண்ண முடையவளாக இருப்பதாகவும் நீங்கள் நினைக்கலாம். ஆத லின் என் அபிப்பிராயத்தை முதலில் தெரிவித்துவிடுகிறேன். உம்மீதுள்ள அனுதாபத்தாலேயே நான் இந்த ஏற்பாடு செய்தேனேயொழிய வேறொன்றுமில்லை." என்று கூறினாள்.

ஹேமவதி சீமாட்டி இவ்வாறு பேசிக்கொண்டிருந்த போதே மிக்க பெருந்தன்மையும் கௌரவமும் உடையவள் போல் நடந்துகொண்டதிலிருந்தே தான் நினைத்தபடி அவள், தன்பால் மோகங் கொள்ளவில்லை என்று ராஜசேகரன் தெளி வாகத் தெரிந்துகொண்டான். ஆகவே அம்மாது தன் மீதுள்ள அனுதாபத்தாலேயே அவ்வாறு செய்திருக்கிறா ளென நிச்சயித்துக்கொண்டதால் அவனும் அவளிடம் மிக்க மரியாதையுடனும் பணிவுடனும் பெருந்தன்மையாகவும் நடந்துகொண்டான்.

ஹேமவதி:—ஐயா! உம்மை இங்கே வரும்படி சொன்

னதற்கு நான் மேலே கூறிய காரணம் மட்டுமேயன்றி மற்றொரு முக்கிய காரணமும் இருக்கிறது. நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டு வாரும். எனக்கு ஒரு பிள்ளை அல்லது வாரிசுதார் பிறக்கிறவரையில் உன் பெரிய தந்தை எனக்காக மிக மனவருத்தமடைந்தார். நான் இறப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்னரே அவர் இறந்து விடுவாரென்பது அவருக்கே தெரியுமல்லவா? எங்களுடைய விவாகத்தினால் குழந்தை பிறக்கவில்லை யென்றால் இந்த ஆஸ்திகளெல்லாம் உமக்குத்தானே சேர்ந்துவிடும். அப்போது நான் என்ன செய்வது? ஆதலால் எனக்கென ஒரு பெருந் தொகையைச் சேர்த்துவைக்கவேண்டியது அவசியமென அவருக்குத் தோன்றியது. ஆகவே பணம் மிகுத்தி வைக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன்தான் நாங்கள் அடிக்கடி இரத்தினபுரிக்கு வராமல் சுந்தர விலாச மாளிகையிலேயே காலங்கழித்துவந்தோம். இப்படிச் செய்த முயற்சியால் பிரபு சுமார் இருபதினுயிரம் பவுன் சேர்த்துவைக்க முடிந்தது. ஆ! அத்தொகை எங்கிருக்கிறதென்று உமக்குச் சொல்லிவிட்டால்?" என்று கூறியபோது அவளுடைய உத்தேசத்தைத் தெரிந்துகொண்டவனேபோய் ராஜசேகரன், "ஓ, சீமாட்டியே! உன்னுடைய கருத்தை நான் தெரிந்துகொண்டேன். அப்பெருந்தொகையில் ஒரு பகுதியை எனக்குக் கொடுப்பதாக நீ யோசித்திருக்கிறாய். இப்போது அத்தொகை இருக்கும் இடத்தைக் காட்டிவிட்டால் நான் பலாத்காரமாக முழுத் தொகையையும் அபகரித்துக் கொண்டுவிட்டால் என்னசெய்வது என்று அஞ்சுகிறாய் போலும். மாதாசியே! நீயாக எனக்கு இவ்வளவு தொகையைக் கொடுக்க முன்வரும்போது நான் உனக்குத் துரோகம் செய்வேனோ என்பதை யோசித்துப்பார்" என்று வினயமாகத் தெரிவித்துக் கொண்டான்.

அப்போது ஹேமவதி சீமாட்டி, "இல்லை, இல்லை. நான் ஒரு மனிதனைப்பற்றி இவ்வளவு கேவலமாக நினைத்துவிட மாட்டேன். இப்பெருந் தொகையில் ஐயாயிரம் பவுன்களை உமக்குக் கொடுக்கலாமென இருக்கிறேன். இன்னும் நீர் உம்முடைய வாழ்க்கைமுறைகளைத் திருத்திக்கொண்டு ஒழுங்காக நடந்துகொண்டால் என் பையனுக்கு மைனர் தீரும் வரையில் நான் அடிக்கடி உமக்கு உதவிசெய்துகொண்டிருப்பேன். இவ்வளவும் நான் செய்வதன் காரணம் நீர் உடனே இம்மாளிகையை விட்டுவிட்டுப் போய்விட வேண்டுமென்பதற்காகத்தான், நீர் இம்மாளிகைக்கு அடிக்கடி வரக்கூடாதென்பதற்காகவே உமக்கு அப்போதைக்கப்போது பண உதவி செய்வதாக வாக்களித்தேன்," என்று கூறினள்.

இதையெல்லாம் கேட்ட ராஜசேகரன், சீமாட்டி கூறிய யோசனையெல்லாம் நியாயமாகவே இருந்ததால் உடனே அவற்றை ஒப்புக்கொண்டு அவள் சம்மதப்படியே நடப்பதாகத் தெரிவித்தான். அவன் மிகவும் அடக்கமுள்ளவன் போலவும், ஹேமவதிக்கு நன்றி செலுத்துபவன்போலவும் காணப்பட்டானென்றாலும் அந்தரங்கத்தில் வெறுப்புள்ளவனாகவே இருந்தான். வெறுப்புமட்டுமல்ல. நன்றிகெட்ட தன்மையுடையவனுய்ச் சமயம் வாய்க்கும்போதே மொத்த தொகையையும் அடித்துக்கொண்டுபோய் விடுவதெனத் தீர்மானித்தான். அதுமட்டுமா? மீண்டும் எப்படியாவது தினகரனை அப்புறப்படுத்தி விடுவதென்றும் யோசித்தான்.

ஹேமவதி சீமாட்டி ராஜசேகரனிடம், "ஐயா! ராஜசேகரரே! இப்போது நாம் இருவரும் இந்த மடத்தின் ஓரத்திலுள்ள படிக்கட்டுகளின் வழியே தரையின் அடியிலுள்ள இருட்டறைக்குச் செல்லவேண்டும். ஏனெனின் அங்கே தான் ஒரு பெரிய இரும்புப்பெட்டியில் அப்பெருந் தொகை

இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்திலும் சந்தர்ப்பத்திலும் நான் உம்மையே நம்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்ட படியால் நான் எத்தகைய முன் எச்சரிக்கையையும் செய்து கொள்ளவில்லை. மெழுகுவர்த்தி விளக்கைக் கையில் எடுத்துக்கொள்வோம். வாய்திறந்து ஒன்றும் பேசாமல் என் பின்னாலேயே வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு சுரங்கம் போன்ற இருட்டறை பக்கமாகச் சென்றாள். அங்கு ஓரிடத்தில் ஹேமவதியின் அந்தரங்க வேலைக்காரியான மந்தரையும் நின்றுகொண்டிருந்தாள். பின்னர் ராஜசேகரனும் ஹேமவதி சீமாட்டியும் அச்சுரங்கத்தில் இறங்கினர்.

* * * * *

இவ்வாறு நாம் விவரித்த சம்பவம் நடந்த தினத்துக்கு நான்காவது நாள் இரவு சுமார் 12-மணிக்கு சுந்தரவிலாச மாளிகையிலுள்ளவர்கள், திருடர்கள் உள்ளே புகுந்திருக்கிறார்கள் என்னும் கூக்குரலைக்கேட்டு பரபரப்புடன் எழுந்து ஆர்ப்பாட்டம் செய்யலாயினர். மந்தரை தன் எஜமானியின் அறையிலிருந்து தன் அறைக்குச் சென்றுகொண்டிருந்தவள் சிலர் குசு குசு வென்று பேசுவதைக் கேட்டுவிட்டு ஓவென்று அலறிக் கூக்குரல் இடலானாள். உடனே வேலைக்காரர்களெல்லாம் கையில் அகப்பட்ட ஆயுதங்களை எடுத்துக் கொண்டு மாளிகை முழுவதிலும் திருடர்களைத் தேடலாயினர். அம்மாளிகையில் அறைகளும், படிக்கட்டுகளும், தாழ்வாரங்களும் அதிகமாயிருந்ததால் எல்லா இடங்களிலும் தேடிமுடிக்க அதிக நேரமாயிற்று. ஆயினும் ஒருவராவது அகப்படவில்லை. எனினும் யாரோ சிலர் உள்ளே புகுந்து பின்னர் சௌகரியமாக வெளியேறிவிட்டிருக்கிறார்கள் என்பதுமட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. இத்திருடர்கள் யாரென்றால் ராட்சஸ குப்பனும் அவனுடைய மூன்று ஆட்

களுமே என்பதில் சந்தேகமில்லை. இரத்தினபுரியில் வெளியாகும் பத்திரிகையில், கிருஷ்ணகிரி ஜமீன்தார் சுந்தரம் பிரபு மாணப்படுக்கையில் இருக்கிறுரென்று வெளியானதை ராட்சஸ குப்பன் படித்ததும் நேராக ராஜசேகரனைக் காணச்சென்றுன். சென்ற இடத்தில் ராஜசேகரன் கிருஷ்ணகிரிக்குப் போய்விட்டதாகத் தெரிந்துகொண்டதால் அவனும் தன்னுடைய மூன்று ஆட்களுடன் கிருஷ்ணகிரிக்கே சென்று அங்கு விசாரித்ததில்,ஹேமவதிசீமாட்டி தன் குழந்தையைத் திரும்ப அடைந்துவிட்டாளென்றும், சுந்தரம் பிரபு இறந்துவிட்டாரென்றும், ராஜசேகரன் அங்கு வந்திருந்து உடனே வெளியேறிவிட்டானென்றும் தெரிந்துகொண்டார்கள். இருந்தாலும் சுந்தரவிலாச மாளிகையில் புகுந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போவதென முடிவு செய்து அன்றிரவு அம்மாளிகையில் புகுந்தார்கள்.

ஆனல் அவர்கள் உள்ளே புகுந்து தாழ்வாரத்தில் சென்றுகொண் டிருந்தபோதுதான் மந்தரை அவர்களைப் பார்த்துவிட்டு அலறினுள். உடனே அவர்கள் ஓட முயற்சித்தார்களென்றுலும் வந்தவழியே திரும்பிச் செல்ல முடியாமற் போனதால் அப்படியும் இப்படியுமாக ஓடி மாளிகையின் மேற்குப் புறமாகச்சென்று கவனித்ததில் அங்கு ஒரு கதவு திறக்கப்பட்டிருப்பதையும், அதன் வழியே வேறு ஒரு கட்டடத்துக்குச் செல்லவழி இருப்பதையும் தெரிந்துகொண்டார்கள். மாளிகையில் ஜனங்கள் விழித்துக்கொண்டார்களென்பதைத் தெரிந்துகொண்ட அவர்கள் அம்மடத்திலேனும் ஒளித்துக் கொள்ளலாமென அங்கே சென்று மறைந்தார்கள். அவர்கள் மடத்தின் நான்கு பக்கங்களிலும் சுற்றியபோது அவர்களுடைய விளக்கு அணைந்துபோனதால், இனி என்ன நடக்கிறதெனக் கவனிப்போமென அவர்கள்

இருட்டில் ஒரு ஓரத்தில் நின்றார்கள். அப்போது அந்த மடத்திலேயே உபாயமாகச் சப்தமாவது அவர்களுக்குத் தெரிந்தது. உள்ளே யாரோ இருக்கவேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். அவர்களைத் தேடவந்த வேலைக்காரர்களும் மடத்தில் நுழைந்தார்களென்றாலும் அங்கு மிக இருட்டாக இருந்ததால் அதிகநேரம் அங்கேயே தேடிக்கொண்டிராமல் விரைவில் வெளியேறிவிட்டனர். திருடர்களும் சொற்பநேரம் அங்கேயே மறைந்திருந்து பிறகு மெதுவாக வெளியே போக முயன்றார்கள். அக்கூட்டத் தலைவனான ராட்சஸ குப்பன் அங்குள்ள சுவரைத் தடவிக்கொண்டே முதலில், மற்றவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டு சென்ற போது அங்கு மாட்டப்பட்டிருந்த ஒரு தீவர்த்தி அவனது கையில்பட்டது. உடனே அவன் அதை ஏற்றினான். விளக்கின் பிரகாசத்தால் அந்த இடம் முழுதும் நன்றாகத் தெரிந்தது. ஆகவே அவன் அத் தீவர்த்தியின் உதவியால் பூமிக்குள் இருக்கும் அறைக்குள் நுழைந்து அது எங்கு செல்கிறதெனப் பார்க்கும்பொருட்டு நேராக அவ்வறை முழுவதிலும் சுற்றித்திரிந்தான். அங்கு வெகுதூரத்தில் ஒரு குளமும் இருந்தது. அக்குளத்தில் ஒரு பிரேதம் கிடப்பதைக்கண்டு அவன் ஆ என்று அலறினான். சொற்பநேரத்துக்குள் அப்பிரேதம் ராஜசேகரனுடையதென்று தெரிந்ததும் அவன் இன்னும் உரத்த குரலில் ஓவென்று கூக்குரலிட்டான். குப்பனும் அவனுடைய மனிதர்களும், ராஜசேகரனுடைய பிரேதம் அங்கிருப்பதுகண்டு திக்பிரமைகொண்டு சிறிதுநேரம் வாய்மூடி மௌனிகளாய் நின்றனர். பிறகு அப்பிரேதம் கரையின் ஓரமாக வரவே குப்பன் அதன் ஆடையைப் பிடித்து இழுத்து பிரேதத்தைக் கரை சேர்த்தான். அப்பிரேதம் மூன்று அல்லது நான்கு தினங்களாகத்தான் அங்கு இருந்

திருக்கவேண்டுமென்று தெரிந்தது. பிரேதத்தை உயிர்ப்பிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடனாவது, அதைப்பற்றிப் புகார்செய்து மாளிகையில் பீதியை உண்டாக்கவேண்டுமென்றாவது அவர்கள் பிரேதத்தைக் கரைசேர்க்கவில்லை. ஆனால் ராஜசேகரன் அணிந்திருந்த சட்டையில் ஏதேனும் இருந்தால் அதை அடித்துக்கொண்டுவிடலாம் என்னும் எண்ணத்துடனேயே அதைக் கரைக்கு இழுத்தார்கள். அப்பிரேதத்தின்மீது இருந்த சொற்ப பணத்தையும், மோதிரம் முதலிய நகைகளையும் கைப்பற்றிக்கொண்டபின்னர் பிரேதத்தை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு அவர்கள் அப்பால் சென்று வெளியேற வழி இருக்கிறதா என்று பார்த்தும் அகப்படாததால் வந்த வழியே திரும்பினர். அப்போது அவர்கள் தீவர்த்தியை அணைக்கவேண்டியதாயிற்று. அவர்கள் மடத்தின்வழியே மாளிகையை யடைந்ததும் அம் மாளிகை நிசப்தமாய் இருந்ததால் அவர்கள் எப்படி அம் மாளிகையில் புகுந்தார்களோ அப்படியே வெளியில் வந்துவிட்டார்கள்.

நேயர்காள்! கள்ளத்தனம், வியபிசாரம் செய்வோர் எக்காலும் உண்மையான அன்புடனும் விசுவாசத்துடனும் இருக்கமாட்டார்களென்பது ராட்சஸ குப்பனுடைய உதாரணத்தினின்றுமே தெரிகிறதல்லவா? ராட்சஸ குப்பன் ராஜசேகரனுடைய உதவியைப் பெற்றிருந்தும், அவனுடைய நண்பன் என்று பெயர் பெற்றிருந்தும் அவன் இறந்துவிட்டான் என்று தெரிந்தும் சிறிதும் அனுதாபம் காட்டாமல் அவனுடைய பிரேதத்தின்மீது இருக்கும் சிறு தொகையையும் கைப்பற்றினனென்றால் அப்படிப்பட்டவர்களுடைய ஹிருதயம் கருங்கல்லாக இருக்கவேண்டுமல்லவா? ஆதலினால்தான் நமது பெரியோர்கள் ஒழுக்கமே விழுப்பந்தரு

மென்றும், ஒழுக்கம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தென்றும் கூறியிருக்கின்றனர். ஒழுக்கமற்றவர்கள் எவரிடமும் உண்மையான அன்புடனும் விசுவாசத்துடனும் இருக்க முடியாது.

5-வது அத்தியாயம்

நாடகக் கோட்டகை சம்பவம்

நாம் மேலே விவரித்த விஷயம் நடைபெற்று பத்தொன்பது வருஷங்களான பின்னர் அதாவது 1844-ஆம் வருஷத்தில் ஒரு சனிக்கிழமை இரவு இரத்தினபுரியிலுள்ள பிரபல நாடகக்கொட்டகையில் நடைபெற்ற காட்சியைக் கவனிப்போம். பத்தொன்பது வருஷங்கள் ஒரு நிமிஷத்தில் கழிந்துவிட்டன. காலம் கழிவதுபற்றிக் கூறவேண்டுமா? எத்தனையோ யுகங்கள், நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. காலம் மிக அருமையானது. செலவழித்துவிட்ட பணத்தை மீண்டும் எப்பாடுபட்டாவது சம்பாதித்துவிடலாம், ஆனால் வீணாகக் கழித்துவிட்ட காலத்தை மீண்டும் என்ன செய்தாலும் பெறமுடியாது. ஆதலின் காலத்தை வீணில் கழிக்காமல் ஒவ்வொரு நிமிஷத்தையும் நல்ல வேலையிலேயே கழிக்கவேண்டுமென்று பெரியோர்கள் உபதேசித்திருக்கின்றனர். கழிந்துபோன எத்தனையோ நூற்றாண்டுகளில் இந்த ஒன்பது வருஷங்களும் மறைந்துவிட்டன. ஆகவே 1844-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு சனிக்கிழமை இரவு நாம் மேலே குறிப்பிட்ட நாடகக் கொட்டகையில் எள்விழ இடமில்லாதபடி ஜனங்கள் திரண்டு கூடி இருந்தார்கள். உலகில் பலதிறப்பட்ட வித்தியாசங்கள் ஏற்

படுத்தப்பட்டிருந்தாலும் அந்த நாடகக் கொட்டகையில் வித்தியாசமே இல்லாதபடி அது சமத்வ மண்டபமாய் விளங்கியது. ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளி, உயர் ஜாதியான் தாழ்ந்த ஜாதியான், அழகானவர்கள் அழகில்லாதவர்கள் ஆகிய பலதிறப்பட்டவர்களும் அங்கே கூடியிருந்தார்கள். எல்லாருடைய முகத்தையும் பார்த்தால் அவர்கள் எல்லா வகையான கவலைகளையும் மறந்து இன்ப சாகரத்தில் மூழ்கியிருப்பதுபோல் தோன்றியது. முதல்வகுப்பு ஸ்தானங்களில் பார்த்தால் சலவைக்கற்களால் செய்யப்பட்டு அழகாக நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட பதுமைகளே போல் ரூபலாவண்யத்திற் சிறந்த மாதர்கள் அணியணியாக வீற்றிருந்தனர். அவர்களுடைய சிவந்த உதடுகளினிடையில் முத்துகள்போன்ற வெண்மையான பற்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன. இம்மாதர்களுடன் வீற்றிருந்த அவர்களுடைய காதலர்கள் நாகரிக உடையை அணிவதிலோ அல்லது தங்களை அலங்கரித்துக்கொள்வதிலோ பெண்களைவிடச் சிறிதும் குறைந்தவர்களல்ல என்பதை ருஜுப்பித்துக் காட்டுவதேபோல் ஆடை அணிகளால் அலங்கரித்துக்கொண்டு தங்கள் தங்கள் மனமொத்த மங்கையர் அருகில் அமர்ந்திருந்தனர். நாடகக் காட்சியோ வருணிக்கமுடியாத அவ்வளவு அதிகமாகச் சிறப்பாக இருந்தது. நடிகர்கள் நாடகமேடையின் மீது தங்கள் அதியற்புத சாமர்த்தியங்களை யெல்லாம் காண்பித்து வந்தார்கள்.

இச்சமயத்தில் நமது கவனத்தைச் செலுத்தவேண்டிய நிலைமையில் இருந்தவர்கள் முதல் வகுப்பு ஸ்தானங்களில் உட்கார்ந்திருந்த அழகிற் சிறந்தவர்களான நான்கு பெண்மணிகளேயாவர். அவர்கள் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு, கண்டோர் மனம் வசிகரிக்கும்படி

அலங்கரித்துக்கொண்டு ஒருவர் பக்கத்தில் ஒருவராக ஒரே ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அந்த நால்வரில் ஒருத்தி மட்டும் மற்ற மூவரைவிட அதிக விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்திருந்தாள். அவள் அவ்வளவு அலங்காரம் செய்துகொள்ளாமல் எளிய உடையையே அணிந்திருந்தாலும் அப்போதும் அவள் பிறரை வசீகரிக்கும் சக்தியுடையவளாகவே இருந்தாள். அவள் மிக உயரமானவளாயும், நன்ருகத் திரண்டு வடிவெடுத்த அங்கங்கள் பெற்றவளாயும், நல்ல யௌவனமுடையவளாயும் இருந்தாள். அவள் இப்படிப்பட்ட ரூபத்துடன் தோன்றினாள் என்ருலும் கபடமற்றவளாயும் பரிசுத்த இருதயமுடையவளாயும் இருந்தாள். அவள் தன் கைக்குட்டையால் அடிக்கடி முகத்தைத் துடைத்துக்கொள்ளும்போது பார்த்தால் தங்க விக்கிரகமே அசைகிறதோ என்று நினைக்கும்படி இருந்தது. அவளுடைய ஸ்தன பாரங்கள் ஆடையையும் பொருட்படுத்தாமல் வெளிக்கிளம்பிக் கண்ணைக் கவரும் வசீகர வடிவத்தைப் பெற்றிருந்தன. அவள் எப்போதேனும், அங்கு பாடப்படும் பாடல்களைக் கேட்டுப் புன்சிரிப்புக் கொள்வாளாயின் அவளது பவழம்போன்ற சிவந்த உதடுகள் பிரிய அதனிடையில் முத்துப் போன்ற வரிசையான சிறு பற்கள் பிரகாசிக்கும் அழகு வருணிக்க முடியாதது. இப்போது நாம் இவ்வளவுதூரம் வருணித்த பெண்மணியின் பெயர் ஷண்பகம். அவளுக்கு அப்போது வயது பத்தொன்பது இருக்கும். யாரேனும் ஒரு ஆடவன் அவளைக் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டால் அவன் அவளுடைய அங்கங்களைப் பதாதிகேசம் வரை நன்ருக ஒருமுறையேனும் பார்த்தால்தான் அவனது மனம் திருப்தியடையும். அவளுடைய அங்கங்கள் ஒவ்வொன்றும் அவ்வளவு அழகானவையாயும் செம்மையான வடிவம் பெற்

றவையாயும் இருந்தன. அவள் பிற ஆடவரால் தொடப் படாதவளாய் இருந்ததால் தான் இவ்வளவு சேர்த்தியுடன் காணப்பட்டாள்.

அவளுக்கு அப்போது கலியாணமாய் இருக்கவில்லை. ஆனால் அவளைப்போன்ற யௌவன வயதையுடைய ஒரு கனவானுக்கு அவள் விவாகம் செய்துகொள்வதென நிச்சயித்து இருவரும் பரஸ்பரம் காதலுடன் நடந்துவந்தார்கள். அந்த ஆடவன் யார் தெரியுமா? அவன்தான் நமது சுந்தரம் பிரபுவின் குமாரனை தினகரம் பிரபு. ஷண்பகம் சீமாட்டியும் அவளுடைய மூன்று சினேகிதைகளும் தனியான ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குத் துணையாக ஆட்வர் வாராமற் போகவில்லை. ஷண்பகம் சீமாட்டியின் சகோதரனை சந்திரசேகரம் பிரபுவும், அச்சீமாட்டியின் காதலனை தினகரம் பிரபுவும் அப்பெண்மணிகளுக்குத் துணையாக வந்திருந்தார்கள். அவர்களிருவரும் அப்பெண்களின் அருகிலேயே இருக்கவேண்டியவர்களா யிருந்தும், சற்று தூரத்திலுள்ள ஆசனங்களில் அமர்ந்திருக்கும் நண்பர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வருவதாகச் சொல்லி அங்கிருந்து புறப்பட்டு வேறு ஒரு இடத்தில் தனியாக நின்றுகொண்டு கொட்டகையில் இருந்த பல பெண்களையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். எந்தப் பெண்களேனும் தங்களைக் கவனித்துப் பார்ப்பார்களா என்பது அவர்களுடைய எண்ணம். ஆண் மக்கள் உலகமே இப்போது பாழ்பட்டுக் கிடக்கிறது. பெண் தெய்வங்களைக் கெடுத்து தவறான வழியில் செலுத்தி அவர்களுடைய வாழ்க்கையையே பாழாக்குகிறவர்கள் ஆண் பேய்களே என்பதில் சந்தேகமில்லை. நாடகக் கொட்டகைமட்டுமல்ல, மிக்க பரிசுத்தமான இடமென்று சொல்லப்படும் கோயில் உற்சவங்களிலும் சரி, மற்றும் பல இடங்களிலும்

சரி, ஆண் பெண்கள் பலர் ஒன்ருகச் சேருமிடங்களிலெல்லாம் கூடும் ஆடவர்கள், தாங்கள் எதற்காக வந்தார்களோ அதைப்பற்றிக் கவனியாமல் அங்கே கூடியுள்ள பெண்களின் மீது தங்கள் பார்வையைச் செலுத்துவது பெரும்பான்மையோரின் வழக்கமாயிருக்கிறது. ஆடவர்கள் தங்கள் மனைவியரையோ அல்லது காதலியரையோ அருகில் வைத்துக் கொண்டே இவ்வாறு பரஸ்திரீ மோகமுடையவர்களாயிருக்கின்றனர். தன் மனைவி தவிர மற்ற மாதர்களைச் சகோதரிகளாகப் பாவிக்கும் காலம் எப்போது வருமோ அப்போது தான் உலகம் உண்மையில் இன்ப மயமானதாய் இருக்கும். மாதர்களும் பிறபுருஷர்களைச் சகோதரர்களாகப் பாவிக்க வேண்டும்.

சந்திரசேகரம் பிரபு சுமார் இருபத்துமூன்று வயதுடையவனும், உயரமாகவும் அழகான தோற்றமுடையவனும் இருந்தான். அவன் முதல்தரமான போக்கிரியாகவும் எந்த தீச்செயலையும் செய்யும் சுபாவமுடையவனும் இருந்தான். அவனும் அவனுடைய சகோதரியும் குழந்தைப் பிராயத்திலேயே தங்கள் பெற்றோர்களை இழந்து திக்கற்றவர்களாயிருந்தார்கள். ஷண்பகம் தன் சித்தியின் வீட்டில் வளர்ந்து வந்தாள். சந்திரசேகரன் மட்டும் தனியாக ஒரு மாளிகை வாடகைக்கு வைத்துக்கொண்டு அதில் வசித்து வந்தான். அவனும் தினகரம் பிரபுவும் நெருங்கிய சினேகிதர்களாயிருந்தார்கள். உண்மையில் அன்பு என்னும் பரிசுத்தமான பாசத்தால் கட்டுப்பட்டு அவர்கள் சினேகமாக இருக்கவில்லை. அவர்கள் இருவருக்குமே அப்படிப்பட்ட பரிசுத்தமான இருதயமோ அறிவோ கிடையாது. எப்படியிருந்தாலும் எக்காரணத்தைக் கொண்டோ அவர்கள் பிரியமுடியாத சினேகிதர்களாகவே இருந்தார்கள். பெரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்

களுக்குள் இப்படித்தான் பல காரணங்களால் சினேகம் ஏற்படுகிறது. சந்திரசேகரன் ஏழையாக இருந்தபடியால் அவன் மிக்க செல்வனான தினகரம் பிரபுவின் தயவைநாடி அவனது சினேகத்தைப் பெற்றிருக்கவேண்டிய அவசிய முடையவனாய் இருந்தான். தினகரம் பிரபுவும், சந்திரசேகரனுடைய சினேகம் பெற்றிருப்பதே தனக்கு ஒரு பெருமை எனக் கருதினான். ஏனெனின், சந்திரசேகரன் இரத்தினபுரியிலேயே பெயர் பெற்றவனாகவும், எக்காரியத்தையும் துணிந்து செய்யக் கூடியவனாயும், அங்குள்ள வழிதவறிய எல்லாப் பெண்களிடமும் செல்வாக்கு பெற்றவனாயும் இருந்தான். அவ்வூரில் அவனுக்குத் தெரியாத தாசிகளே கிடையாது. பல பெண்களினிடையே செல்வாக்கு பெற்ற ஒருவனை தினகரம் பிரபு நேசிக்க விரும்பியதில் ஆச்சர்ய மொன்றுமில்லை.

கிருஷ்ணகிரி மைனர் ஜமீன்தாரனான தினகரம் பிரபுவைப்பற்றி இங்கு சிறிது விவரித்துக் கூறவேண்டியது அவசியமாகிறது. அவனுக்கு இப்போது வயது பத்தொன்பதாகி அதற்குமேலும் ஒன்றிரண்டு மாதங்களாகின்றன. அவன் குள்ளமாகவும், ஒல்லியாகவும், பலஹீனனாகவும் இருந்தான். மிக்க விகாரமுடையவனாக இல்லையென்றாலும் பிறரை வசிகரிக்கக்கூடிய சக்தி அவனிடம் எதுவும் இருக்கவில்லை. அவனுடைய பேச்சும் நடத்தையும் அவன் இழிவான குணங்களையே உடையவன் என்பதைக் காட்டிற்று. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல் அவனது முகத்தைக்கண்ட மாத்திரத்தில் அவனுடைய குணங்களைப்பற்றி எவரும் எளிதில் தெரிந்துகொண்டுவிடலாம். சுயநலமுடையவனாயும், சதாகாலமும் சிற்றின்பப் பிரியனாயும், எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் உடனே அவளுடன் கூடிக்குலாவ வேண்டுமென்னும் பேராசை பிடித்தவனாயும், தான் பணக்

காரணுகையால் எல்லாப் பெண்களையும் தன் இஷ்டப்படி ஆட்டலாம் என்னும் மமதை கொண்டவனுயும் இருந்தான். அவனுடைய அருமைத்தாய் அவனுக்கு எல்லாவகையான கல்வியையும் கற்பித்தாள். கிருஷ்ணகிரி சுந்தர விலாச மாளிகையில் இருந்தபோதும், இரத்தினபுரியில் நந்தவனத் தெருவிலுள்ள மாளிகையில் இருந்தபோதும் அவனுக்குத் தனியே நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் அவனுக்குப் பல கலைகளையும் கற்பித்தார்கள். பிறகு அவன் இரண்டொரு சர்வகலாசாலைகளிலும் படித்துப் பட்டம்பெற்றுன். ஆயினும் அவன் பணக்கார வீட்டுப் பிள்ளை யாதலால் ஆசிரியர்களும்கூட அவனை, 'பிரபுவே' என்று அழைத்து மரியாதை காண்பித்து வந்ததால் அவன் யாருக்கும் அஞ்சாமல் கேட்பாரற்றுத் திரிந்து இப்படிப்பட்ட இழிதகைமையை அடைந்தான். அது மட்டுமேயன்றி அவன் இரண்டொரு அன்னிய நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து ஆங்காங்குள்ள விசேஷங்களையும் கண்டறிந்திருந்தான். அவன் அன்னிய தேசங்களிலிருந்து திரும்பிவந்ததும் அவனுக்கு சந்திரசேகரம் பிரபுவின் சினேகம் கிடைத்துவிட்டது. இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களில் மைனர் பருவம் நீங்கியதும் அத்தேசத்தின் சட்டசபையில் ஸ்தானம் வகிக்கும் பரம்பரை பாத்தியதை யுடையவனுய் இருந்தான். இப்படிப்பட்ட யோக்கியதை யுடையவர்கள் தேசத்தின் சட்டசபைகளில் உட்காருவதால் எத்தகைய நன்மைகள் விளையுமென்பதுபற்றி வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம். தேச நலங்கருதி ஏற்பட்ட சட்டசபைகளில் சுயநலமற்றவர்களாயும், தியாகிகளாயும், மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவிக்கும் சுபாவமுடையவர்களாயும், ஏழை மக்களின் துயரங்களைத் தங்களுடையதாகவே கொள்ளும் மனேபாவமுடையவர்களாயும் உள்ள உத்தமர்களே ஸ்தா

னம் வகிக்கவேண்டும். அப்போதுதான் அத்தகைய சபைக ளால் தேச மக்களுக்கு நன்மையுண்டு. அதிகார வர்க்கத்தி னரின் தயவை நாடி அவர்களுக்குத் தாசானுதாசம் புரிவோர் சட்டசபைகளுக்குச் செல்லும்படி தேசமகா ஜனங்கள் நடந்துகொண்டால் அது தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பாகும்.

இப்போது சந்திரசேகரம் பிரபு, தினகரம் பிரபு ஆகிய இருவருடைய குணங்களையும்பற்றி நமக்குவேண்டிய அளவு கூறிவிட்டபடியால் இனி நாம் நமது கதையைத் தொடர் வோம். ஷண்பகம் சீமாட்டியும் அவளுடைய சினேகிதை களும் உட்கார்ந்திருந்த இடத்தினின்றும் அப்பால் சென்ற அந்த இரு ஆடவரும் முக்கால் மணி நேரம் கழிந்தபின்னர் அங்கு வந்துசேர்ந்தனர். அவர்களிருவரும் அப்போது மது பானம் அருந்திவிட்டுப் பலவித மனோவிகாரத்துடன் அங்கு வந்தபடியால் அவர்களுடைய முகத்தில் தெளிவு இருக்க வில்லை. ஷண்பகம் அப்படிப்பட்ட நிலைமையில் அவளுடைய காதலனான தினகரம் பிரபுவின் முகத்தைக் காணவும் வெறுப் படைந்தாள். ஆனால் அதை தினகரம் பிரபு உணர்ந்துகொள் ளாமல் அவ்வழகிய பெண்மணி அவனை மனப்பூர்த்தியாக உள்ளும் புறமும் காதலிப்பதாகவே மனப்பால் குடித்தான்.

ஷண்பகத்தின் சகோதரன் சந்திரசேகரன் தன் சகோ தரியினிடம், 'ஷண்பா! நாங்கள் இருவரும் இங்கில்லாமல் நீ ஏமாற்றமடைந்தாயோ? நாங்கள் எங்கேயோ போய் விட்டோமென்று கருதினாயோ' என்று கேட்டான். அப் போது அருகிலிருந்த தினகரம் பிரபு, 'உண்மையிலேயே நாம் திரும்பிவருகிறவரையில் உன் சகோதரி ஆவல் மிகுதியால் வருந்தியிருக்கவேண்டும்' என்று புன்சிரிப்புடன் கூறிக் கொண்டே ஷண்பகத்தின் பக்கமாகத் திரும்பி, 'ஷண்பகம்!

உண்மையைச் சொல். நாங்கள் வருகிறவரையில் நாங்கள் வரவேண்டிய பக்கத்தையே நோக்கிக்கொண் டிருந்தாயல்லவா?' என்று கேட்டான். அதற்கு அவளும் புன்சிரிப்புடனும் இனிய மொழியிலும், 'ஆம், வாஸ்தவம்தான். நீங்கள் நீண்டநேரமாகியும் வரவில்லையே என்று நினைத்ததுண்டு. ஆனால் நீங்கள் இல்லாத வேளையில் நாடக ஆக்டர் எங்களைப் பரவசப்படுத்தி இதர விஷயங்கள் ஞாபகத்துக்கு வாராதபடி செய்துவிட்டார்,' என்று சமாதானம் கூறினாள்.

தினகரம் பிரபு மற்ற மூன்று பெண்களிடம் ஏதோ பேச முயன்றபோது சந்திரசேகரம் பிரபு தன் சகோதரியிடம், 'சகோதரி! நீ தினகரம் பிரபுவிடம் இவ்வளவு அலட்சியமாகப் பேசக்கூடாது. இதுவரை அவன் இதைக் கவனிக்கவில்லை. கவனித்துவிட்டால் பிறகு கஷ்டம்' என்றான்.

ஷண்பகம்:—என்ன கஷ்டம். இதனால் என்ன ஆபத்து வந்துவிடுமென்று பயப்படுகிறாய்?

சந்திரசேகரன்:—என்ன கஷ்டமா? உன்னை விவாகம் செய்துகொள்ள முடியாதென்று மறுத்துவிட்டால் என்ன செய்வது? உன்னிடத்தில் அவனுக்கு அதிக காதல் இருக்கிறதென்று நான் சொல்ல வரவில்லை.

ஷண்பகம்:—சகோதரா! உண்மையில் என்னுடைய இன்பத்தைக் கவனிப்பதாயின் அவர் என்னை விவாகம் செய்து கொள்வதில்லையென மறுத்துவிட்டால் நல்லதுதான்.

சந்திரசேகரன்: —அப்படியல்ல. தினகரம் பிரபுவைக் கலியாணம் செய்துகொண்டால் நீ மிக்க சௌகரியமான வாழ்க்கையை நடத்தலாம். இது உனக்குத் தெரியாதா?

இதைக்கேட்ட ஷண்பகம் துக்கத்துடன் கண்ணீர்விட்டுக்கொண்டே, 'வேண்டாம்; இனி இவ் விஷயத்தைப்பற்

றிப் பேசவேண்டாம்' என்று கூறினள். அச்சமயத்தில் தினக ரம் பிரபு தன் காதலியை நோக்கி, 'நாம் இப்போது கிரௌன் தியேட்டருக்குப் போகலாம். அங்கே இதுவரையில் நமது நகரத்துக்கு வந்திராத ராஜலட்சுமி நடிக்கப் போகிருளாம். அவள் மிகவும் அழகானவளென்று சொல்லப்படுகிறது. இது பொய் வதந்தியாக இராதென்றே நினைக்கிறேன்,' என்று தெரிவித்தான். அதற்கு அவள், 'ஓஹோ! இப்போது நீங்களும் என் சகோதரரும் நண்பர்களைக் காணப் போயிருந் தீர்களே, அங்கு இந்த சங்கதி தெரிந்ததா?' என்று கேட்டா ளாயினும் அவர்களிருவரும் உண்மையில் எங்கு, எதற்காகச் சென்றிருந்தார்கள் என்பதை அறிந்துகொண்டவளேபோல் மிக்க வெறுப்பைக் காட்டினள். ஆயினும் மறுநிமிஷமே அதை மறைத்துக்கொண்டு மிகுந்த அன்புள்ளவள்போல் நடிக்கலானுள்.

கிரௌன் தியேட்டருக்குச் சென்றதும் வெளியில் நின் றிருந்தபோது ஷண்பகம் தினகரம் பிரபுவைப்பார்த்து, 'ஐயா, இன்று உம்முடைய சகோதரிகள் ஏன் வரவில்லை. நான் சற்று முன்பே இதைப்பற்றிக் கேட்காமல் போனது என் தவறு தான்,' என்று கேட்டாள். அதற்கு அவன், 'என் தாயா ருக்கு நாடகக் கொட்டகை என்றாலே பிடிக்காது. மேலும் இன்று காலை எனக்கும் என் தாயாருக்கும் கொஞ்சம் பேச்சு வார்த்தை நடந்தது. ஆதலின் அவள் மனநிம்மதியுடன் இல்லாமற்போகவே இங்கு வர முடியவில்லை. அன்றியும் ராஜேஸ்வரிக்கு உடம்பு சரியாக இல்லை. கற்பகமும் அவ ளுக்குத் துணையாக வீட்டில் இருக்கிருள். ஆதலால் அம் மூவரும் இன்று வர முடியாமற்போய்விட்டது' என்று சமா தானம் கூறினன். அப்போது ஷண்பகம் தன் காதலனி

டம், 'நீர் ஏன் உங்கள் தாயினுடன் மனஸ்தாபம் கொண்டீர்கள்' என்று கடிந்து பேசுபவள்போல் கேட்டாள்.

தினகரம்:—என் மனஸ்தாபப்படலாகாது. எல்லாம் அவளுடைய குற்றம்தான். இன்னும் என்னைக் குழந்தை போல் அவள் பாவிக்கவேண்டு மென்கிருள். அது எனக்குப் பிடிப்பதில்லை. அவள் எப்போதேனும் அதிகாரம் செய்ய முயற்சிக்கும்போது அவளுடைய அதிகாரத்துக் குட்பட நான் தயாராக இல்லை என்பதைக் காட்டிவிட நான் முயல்வதுண்டு. இன்றுகாலை பேசும்போது இனி அவள் எனக்கு எப்படிப்பட்ட பிரசங்கமும் செய்யக் கூடாதெனக் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். என் குடும்ப சொத்தெல்லாம் ஆடவனுகிய எனக்கே உரியதென்றும், அவள் வெறும் ஒரு மடத்துச்சாமியின் குமாரிதான் என்றும் ஞாபகப் படுத்தியதுதான் அவளுக்கு அதிக ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது.

ஷண்பகம்:—நீர் உண்மையிலேயே இப்படிப் பேசியதாக நான் நம்பலாமா? உம்மைப் பெற்றெடுத்த தாயை நீர் இவ்வாறு பேசியிருப்பீர்களென்று நான் நினைக்கவில்லையே.

தினகரம்:—ஆம்; நான் பேசியது வாஸ்தவமே. அப்போது என் தாயின் அந்தரங்க தோழியான மந்தரையும் அதில் குறுக்கிட வந்தாள். எனக்கு அதிக கோபம் வந்துவிட்டது.

என்று கூறிக்கொண்டே எதிரில்வரும் ஒரு ஆளைக் கவனத்துடன் நோக்கினன். அவன் யாரை நோக்கினனே அவனையே ஷண்பகமும் பார்த்தாள். உடனே அவளுடைய முகத்தில் ஒருவித சந்தோஷக்குறி தோன்றியது. அப்போது தினகரம் பிரபு தன் காதலியிடம், 'அதோ மோகனதாஸ் வருகிறுன். அவன் இவ்வாறு அடிக்கடி நாடகக் கொட்டகைக்கு

வருபவன் என்று நான் நினைக்கவில்லை. இக்காலத்தில் சங்கீதம், சித்திரம் முதலியன கற்றுக்கொடுப்பது நல்ல வருவாயைத் தரக்கூடிய தொழிலென்றே தெரிகிறது. சரி! மோகனதாஸ் உனக்கும் சித்திரம் கற்றுக் கொடுப்பதாகத் தெரிகிறதே. மெய்தானா?' என்று கேட்டான்.

அதற்கு அவள், 'ஆம், சென்ற இரண்டு வருஷங்களாக நான் அவரிடம் சித்திரம் பழகி வருகிறேன். ஏன்? உமது சகோதரிகளும் கூட அவரிடம்தானே சித்திரம் கற்றுக் கொள்கின்றனர். அவர் உண்மையிலேயே சித்திரம் எழுதுவதிலும் கற்றுக் கொடுப்பதிலும் மிக சமர்த்தர்,' என்று கூறினாள். அப்போது அவன், 'ஆம், என் சகோதரிகளும் அவனிடம்தான் கற்றுக் கொள்கின்றனர். அதனால்தான் அவன் எனக்குத் தெரிந்தது. அவன் நமக்கு வணக்கம் செலுத்துகிறான் பார்' என்றான்.

ஆனால் தினகரம் பிரபு மோகனதாசுக்குத் திருப்பி வணக்கம் செலுத்தவில்லை. ஷண்பகம் அவனிடம் பாடம் கற்றுக் கொள்பவளாதலால் அவளும் அவ்வாறே இருந்து விடாமல் திருப்பி வணக்கம் செலுத்தினாள். இதனால் தினகரம் பிரபுவுக்குச் சிறிது ஆத்திரம் வந்து விட்டது. ஆகவே காதலர்களிருவரும் அப்பேச்சை விட்டுவிட்டு வேறு விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்து விட்டனர். மோகனதாஸும் அவர்கள் இருந்த இடத்துக்கு வாராமல் நேராக நாடக மேடைக்குச் சென்று விட்டான்.

மோகனதாஸ் இளம் வயதினன். இளம் வயதுக்கேற்ற அழகுடையவன். அது மட்டுமல்ல, அவன் மிக்க பெருந்தன்மை யுடையவனாதலால் எல்லாரும் அவனைப் போற்றினார்கள். அவன் அன்னியதேசம் சென்று கற்றுக்கொண்டு வந்த

சங்கீதம் மிகச் சிறப்பானதாக இருந்ததால் பெரிய பணக்காரர் வீட்டுப் பெண்கள் முதல் எல்லாரும் அதைக் கற்றுக் கொள்ள ஆவலுடையவர்களாய்ப் பலரும் கற்று வந்ததால் அவனுக்கு நிறைய வருவாய் கிடைத்தது. அவன் பிரபுக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப்போல் வீண் ஆடம்பரங்களில் மனம் செலுத்துபவ னல்ல.

பிறகு அனைவருமாகச் சேர்ந்து நாம் மேலே கூறிய தியேட்டருக்குச் சென்றார்கள். அங்கு ஆட்டம் ஆரம்பிப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்பே அவர்கள் சென்று விட்டதால் அனைவரும் ஒரு அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு சேவகன் அங்கு வந்து சந்திரசேகரம் பிரபுவை நோக்கி, 'பிரபுவே, உங்களையும் உமது சகோதரி ஷண்பகம் சீமாட்டியையும் கண்டு பேசுவதற்காக வெளியில் ஒரு கனவான் காத்திருக்கிறார். அவர் பரிதிபுரத்திலுள்ள 'உங்களுடைய சித்தப்பாவினிடமிருந்து கடிதங்கள் கொண்டு வந்திருக்கிறாராம்' என்று தெரிவித்து அறிமுகச் சீட்டு ஒன்றைக் கொடுத்தான். அச்சீட்டில் 'ஸ்ரீமான் செல்வநாதர்' என்று எழுதி யிருந்தது கண்டு சந்திரசேகரம் பிரபு, 'இப்போது யாரையும் பார்த்துப் பேச எனக்கு அவகாசமில்லை' என்றான். இதற்குள் அருகிலிருந்த ஷண்பகம் சீமாட்டி, 'அப்படி யல்ல. செல்வநாதர் நமது சித்தப்பாவினிடமிருந்து கடிதம் கொண்டு வந்திருந்தால் நாம் அவரைப் பார்க்காம லிருக்க முடியுமா? அவரைக் காண்பதுடன் அவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய வேண்டியது நமது கடமை யல்லவா?'' என்று கூறினாள். ஆகவே சந்திரசேகரனும், வந்திருக்கும் கனவானை உள்ளே அனுப்பும்படி அந்த ஆளிடம் சொல்லி யனுப்பினான்.

அந்த ஆள் வெளியில் சென்றதும் தினகரம் பிரபு,

'செல்வநாதரா ? அந்த ஆள் வயதானவராயும், பிரபுக்களுடன் சேர்ந்து பழகர்தவராயும் இருப்பார் என்றே நம்புகிறேன். ஷண்பகம்! உன்னுடைய சகோதரர் அவரை இந்நேரத்தில் காண மறுத்தது எனக்கு ஆச்சர்யமாக இருக்கவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தபோது செல்வநாதரே அவ்வறையில் நுழைந்தார். அவர் சுமார் அறுபது வயதானவராயும், குள்ளமாகவும் தடித்த தேகத்துடனும் சிவந்த முகத்துடனும் காணப்பட்டார். அவர் அணிந்திருந்த உடையும் பண்டைக்காலத்திய மாதிரியானதாய் இருந்தது. ஆனால் அதுவும் பணக்காரர்கள் சகஜமாக அணிந்து கொள்ளும் அவ்வளவு விலை உயர்ந்ததாக இருந்தது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதேபோல் அவரது முகத்தைப் பார்க்கும்போதே அவர் சுறுசுறுப்பும் நல்ல சுபாவமும் உடையவர் என்பது நன்கு விளங்கியது. அவர் அறையில் நுழைந்ததும் அங்கிருந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தி விட்டு எல்லாரையும் ஒருமுறை பார்த்தார். தினகரம் பிரபு மட்டும் அவரைக் கண்டதும் பரிகாசத்துடன் சிரித்தானென்றாலும் அதை வெளிக்காட்ட இஷ்டமில்லாமல் ஒரு புறமாகத் திரும்பிக் கொண்டான். அவர் வணக்கம் செலுத்தியதும் சந்திர சேகரம் பிரபுவும் பெருந்தன்மையான முறையில் அவருக்குத் திருப்பி வணக்கம் செலுத்தினன். ஷண்பகம் சீமாட்டி தனது ஆசனத்தினின்றும் எழுந்து ஒரு அடி முன் எடுத்து வைத்து மரியாதையுடன், 'தாங்கள் தயவு செய்து இந்த ஆசனத்தில் அமருங்கள்' என்ருள்.

அதற்கு அவர், 'இல்லை, மாதரசியே! நீ இவ்வாறு சொன்னதற்காக எனக்கு மிகவும் சந்தோஷம். நான் அவசர வேலையாகப் போகவேண்டியதா யிருக்கிறது. பரிதிபுரத்தில் நான் இருந்தபோது உங்கள் சித்தப்பாவுடன் சினேகித

ஞானேன். அங்கிருந்து நான் புறப்பட்டு வரும்போது அவர் இக்கடிதங்களை என்னிடம் கொடுத்தார். இதோ ஒரு கடிதம் சந்திரசேகரம் பிரபுவுக்கும் மற்ருெரு கடிதம் ஷண்பகம் சீமாட்டியாகிய உங்களுக்கும் இருக்கிறது. இவை இரண்டு மட்டுமே யன்றி மற்ருெரு கடிதமும் என்னிடம் இருக்கிறது. அது உங்கள் சித்தப்பா அவாது மனைவி மதனவல்லி சீமாட்டிக்கெனக் கொடுத்திருக்கிருர். அதை நீங்கள் அந்த அம்மையாரிடம் சேர்ப்பித்து விடுவீர்கள் என்னும் நம்பிக்கையின் மீது அதையும் உங்களிடம் இதோ கொடுக்கிறேன்' என்று கூறிக்கொண்டே எல்லாக் கடிதங்களையும் ஷண்பகத்தினிடம் கொடுத்து விட்டார்.

அப்போதும் ஷண்பகம் மிக்க மேதை மரியாதையுடன், 'என் சித்தியின் கடிதத்தை மிக ஜாக்கிரதையாக வைத்திருந்து வீட்டுக்குச் சென்றதும் அவரிடம் கொடுத்து விடுவேன்' என்று தெரிவித்தாள். சந்திரசேகரம் பிரபு அவரிடம், 'ஐயா, தாங்கள் இப்போது எங்கே தங்கி யிருக்கிறீர்கள். ஏனெனின் நானே அங்கு வந்து தங்களைக் காணலாமென்று யோசித்திருக்கிறேன்' என்று கேட்டான். அதற்கு அவர், 'நான் மூலைக்கொத்தளத்தில் தங்கி யிருக்கிறேன்' என்று கூறியதும் சந்திரசேகரம் பிரபுவும், திக்பிரமை யடைந்தான். பிரபுக்கள் வமிசத்தில் பிறந்த இவர்களைக் காண வந்திருக்கும் ஒருவர், பரம ஏழைகளும் கல்வி யறிவற்றவர்களும் வசிக்கும் அப்பாகத்தில் தங்கி யிருக்கிருரென்பதைக் கேட்கவே அவர்களுக்கு வெட்கமா யிருந்தது. அருகில் இருந்த மற்றவர்கள் அப்பகுதியின் பெயரைக்கேட்டு விட்டார்களோ என்றும் அஞ்சினர்கள். அப்போது வேண்டுமென்றே செல்வநாதரையும், அவரிடம் மரியாதை செலுத்தும் ஷண்பகத்தையும் பரிகாசம் செய்ய வேண்டுமென்னும்

எண்ணத்துடன் தினகரம் பிரபு அவரை நோக்கி, 'ஐயா, நீர் தங்கி யிருக்கும் இடத்தின் பெயரை மற்றொருமுறை சொல் லுங்கள். அதை ஷண்பகம் சீமாட்டி சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை' என்று கேட்டான்.

அப்போது ஷண்பகம், 'இல்லை. நீங்கள் தங்கி யிருக் கும் இடம் இன்ன தென்பதை நான் தெரிந்து கொண் டேன். என் சகோதரரை உம்மிடம் அனுப்புவதற்காகவும், என் சித்தியும் உங்களை வரவழைத்துப் பேச விரும்பினல் உங்களிடம் ஒரு ஆளை அனுப்புவதற்காகவும் நான் உங் கள் விலாசத்தை நன்றாகக் குறித்துக் கொண்டிருக்கிறேன்' என்று அப்பெரியவரிடம் சொன்னள். அவரும் சந்தோஷ மடைந்து, 'மாதரசியே! உன்னுடைய இனிய குணத்துக் காக நான் உன்னைப் பாராட்டுகின்றேன். உங்கள் சித்தியா ரான மதனவல்லி சீமாட்டியுடன் அறிமுகம் செய்துகொள்ள எனக்கும் மிக சந்தோஷமே' என்று கூறிவிட்டு சந்திரசேக ரம் பிரபுவை நோக்கி, 'பிரபுவே, நீர் என்னைக்காண வருவ தாயின் பகல் பன்னிரண்டு மணிக்குள் வந்து விடவும். எனக்கு இரத்தினபுரியில் அதிக வேலை இருப்பதால் பன்னி ரண்டு மணிமுதல் மாலை ஐந்து மணிவரை நான் வீட்டில் இருக்க மாட்டேன்' என்று கூறினர். அதற்கு சந்திரசேக ரன், 'பன்னிரண்டு மணிக்குள்ளாகவா? ஐயா! என்னை மன் னிக்கவேண்டும். அந்த நேரத்தில் நான் எங்கும் வெளியில் போகும் வழக்கமில்லை,' என்று சொன்னன். அதைக்கேட்ட செல்வநாதர், 'அப்படியானல் நீர் அங்கு வருவதற்கு எப் போது சௌகரியமோ அப்படிப்பட்ட சமயத்தில் இருவரும் சந்திக்க ஏற்பாடு செய்வோம். நான் பின்னல் தகவல் அறி விக்கிறேன்' என்று கூறிவிட்டு அங்கிருந்த அனைவருக்கும் வணக்கம் செலுத்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்ருர்.

அவர் சென்ற பின்னர் தினகரம் பிரபு தன் காதலியாகிய ஷண்பகத்தினிடம், 'நான் சொன்னது சரியாகப் போய்விட வில்லையா? உன் வாழ்க்கையில் இப்படிப்பட்ட வேடிக்கை யான ஆசாமியை எப்போதாவது பார்த்திருக்கிறாயா?' என்று கேட்டான். அதற்கு அவள் அவனது குணத்தைக் கண்டிக்கும் தோரணையில், 'பிரபுவே! அப் பெரியார் எனது சித்தப்பாவின் நண்பர் என்பதை நீங்கள் முதலில் கவனத் தில் வைத்துக்கொள்ளவேண்டும். மேலும் அவர் வயதான வராதலால் அவரிடம் மரியாதையுடன் நடந்துகொள்வதே முறைமையாகும். அன்றியும் என் சித்தப்பா எழுதியுள்ள இக்கடிதத்தில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதையும் கவனியுங்கள்' என்று கூறிக்கொண்டே அக் கடிதத்தை அவ னிடம் கொடுத்தாள்.

தினகரனும் அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:—

"பரிதிபுரம் 23—5—1844.

"எனதன்புள்ள ஷண்பகம்!

"இக்கடிதம் கொண்டுவரும் செல்வநாதர் எனது அந் தாங்க தோழர். அவர் இங்கு பாங்கி ஒன்றை ஸ்தாபித்துப் பல வருஷங்கள்வரை நடத்திவந்தார். ஆனால் இப்போது தொழிலை நிறுத்திவிட்டு இரத்தினபுரிக்குத் திரும்புகிறார். அவருக்குவேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பீர்க ளென்று எதிர்பார்க்கிறேன்.

உன் அன்புள்ள சித்தப்பா
மனோகரம் பிரபு."

இக்கடிதத்தைப் பார்த்த சந்திரசேகரனும் தன் கடிதத் திலும் அவ்வாறே எழுதப்பட் டிருப்பதாகத் தெரிவித்தான்.

அவர்கள் இவ்வாறு பேசிக்கொண் டிருந்தபோது சினிமா மேடையிலுள்ள ஜனங்களெல்லாரும் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். இத்தகைய ஆரவாரத்திற்குக் காரண மென்ன வென்று திரும்பிப் பார்த்தபோது நடனத்திற் சிறந்த ராஜலட்சுமி முதல் முறையாக அந்நகரின் மேடையில் தோன்றியதே என்பதை அறிந்தார்கள். ராஜலட்சுமி அழகிற் சிறந்தவள். அவளுடைய இதர விவரங்களைப் பற்றிப் பின்னர் தெரிவிக்க வேண்டி யிருப்பதால் இப்போது அதிகம் கூறப்போவதில்லை. அவள் தன் முழுச் சாமர்த்தியத்தையும் காட்டி அங்குக் கூடியிருந்த அனைவருடைய உள்ளமும் ஆனந்த சாகரத்தில் மூழ்கும்படி செய்தாள். ஆண் பெண் அடங்கலாக அனை வரும் அவளைப் புகழ்ந்தனர். அன்றிரவு அக்காட்சி முடிந்த தும் அனைவரும் அவரவர்களுக்கேற்ற வண்டிகளை அமர்த்திக் கொண்டு தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

நேயர்காள்! செல்வாரதர் என்னும் அன்னியரை வர வேற்பதில் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த தினகரனும் சந்திரசேகரனும் எவ்வளவு அகம்பாவத்துடன் நடந்து கொண்டார்கள் என்பதைக் கவனித்தீர்களா? செல்வர்கள் மமதை கொள்வது உலகில் சகஜமாயிருக்கிறது. 'செல் வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்பதுபோல் பணக்கா ரர்கள் எல்லாருக்கும் உதவிசெய்து அனைவரும் சௌகரிய மான வாழ்க்கையை அடையும்படி செய்யவேண்டும். பணக் காரராயினும், ஏழையாயினும் அடக்கத்துடனும் பணி வுடனும் நடந்துகொள்வதுதான் அறிவுடையோர்க் கழ காகும்.

6-வது அத்தியாயம்

பெரிய இடத்து நண்பர்கள்.

நாடகக் கொட்டகையில் நடந்த சம்பவம் சனிக்கிழமை இரவு நடந்ததென்று முன் அத்தியாயத்தில் கூறியுள்ளோம். அதற்கடுத்த திங்களன்று பகல பன்னிரண்டு மணிக்கு சந்திரசேகரம் பிரபு தன்னுடைய படுக்கை யறையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தபோது அவனுடைய சேவகன், ஆறுமுகம் அவ்வறையின் கதவைத் தட்டினான். அப்போது சந்திரசேகரன் விழித்துக்கொண்டு கதவைத் திறந்துவிட்டு, தன் படுக்கையின் மீது உட்கார்ந்த வண்ணம், 'இப்போது அதிக மணியாய்விட்டதுபோலும். இரவெல்லாம் தூக்கமில்லாததால் எனக்கும் தெரியாமலே தூங்கிவிட்டேன். ஏதேனும் கடிதங்கள் வந்திருக்கின்றனவா ?' என்று கேட்டான். உடனே சேவகன் பல கடிதங்களை அவனிடம் கொடுத்ததில் அவன் அவற்றை அலட்சியமாக ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்துவிட்டு, 'இவற்றில் கடன்காரர் கடிதங்களையும், அழைப்புக் கடிதங்களையும் தனித்தனியே பிரித்து வைக்கவேண்டும் 'கடன்காரர் சிலர் தொந்தரை அதிகம்' செய்கிறார்கள் என்று சேவகனிடம் கூறினான். அதற்கு அவன், 'ஆம்; எப்படி நடந்துகொள்ளவேண்டு மென்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. என்ன செய்வது ?' என்று கூறிக்கொண்டே சந்திரசேகரன் முகக்ஷவரம் செய்துகொள்வதற்கு வேண்டிய சாமான்களையெல்லாம் மேஜையின் மீது எடுத்துவைத்தான்.

சந்திரசேகரம் பிரபு க்ஷவரம் செய்துகொண்டே தன்

சேவகனான ஆறுமுகத்தினிடம், 'என் சிறிய தந்தை மனோகரம் பிரபுவின் செய்கை கண்டிக்கத் தக்கதல்லவா! வருஷ வாரி முப்பதினாயிரம் பவுன் வரும்படியுள்ள அவர், தனக்குப் பின் வாரிசாக வரப்போகிற எனக்கு வருஷம் எண்ணூறு பவுன் கொடுப்பது நியாயமா? என் சித்தி மதனவல்லி சீமாட்டியும் தாராள நோக்கத்துடன் எனக்குப் பண உதவி செய்வதால் தான் நான் ஒருவாறு சமாளிக்கிறேன். வரும்படிக்குமேல் நான்கு மடங்கு செலவாகிறபடியால்தான் இப்படிக் கடனால் அவஸ்தைப்படவேண்டியதாய் இருக்கிறது' என்று கூறினான். அதைக் கேட்ட ஆறுமுகம், 'எஜமானே! கடன்காரருடைய தொந்திரவு அதிகமாகத்தான் இருக்கிறது. நீங்கள் மனோகரம் பிரபுவினிடமிருந்து ஒரு பெருந் தொகையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாயும், அத்தொகை கிடைத்ததும் கடன்களைத் தீர்த்துவிடுவீர்களென்றும் நானும் சமாதானம் சொல்லிவருகிறேன். அப்படியிருந்தும் அவர்கள் திருப்தியடையாமல் தொந்திரவு செய்வதிலேயே கருத்தாயிருக்கின்றனர்,' என்று சொன்னான்.

அதைக் கேட்டு ஆத்திரமடைந்த சந்திரசேகரம் பிரபு, 'ஆம்; அவர்கள் மடத்தனமாக நடந்துகொள்ளுகிறார்கள். இவர்களை அழவைப்பதற்காகவாவது அன்று சுந்தரம் செட்டியார் செய்ததேபோல் இன்சால்வென்சி பாரம் போட்டுவிட்டு சர்க்காரின் பாதுகாப்பில் இருந்துவிடவேண்டும் என்று நான் சிற்சில சமயங்களில் நினைப்பதுண்டு. சுந்தரம் செட்டியாருக்கு அறுபதினாயிரம் பவுன் கடன் இருந்தது. உடனே இன்சால்வென்ட்டாய் விட்டார்,' என்று கூறினான். இதற்குள் அவன் க்ஷவரம் செய்துகொண்டு புறப்பட்டதால் பக்கத்து அறைக்குச் சென்று அங்கு மேஜை மீது வைக்கப்பட்டிருந்த காலை ஆகாரத்தை உட்கொண்டான். பிறகு,

186566
சென்னை-600 008

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3		0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஹு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இ ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 6-பாகமும் ...	11	10	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	18
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	10
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	12
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள்			அமராவதி 2 பாகமும்	4	0
65 பாகமும் ...	9	10	மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்